# உதயன்

சுடர் : 36 | கதிர் : 226 | சனிக்கிழமை | ஆனி 26 ஆம் நாள் 10 ஜூலை 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111

## சாவு 43 தொற்று 1,537

கொழும்பு, ஜூலை 10
இலங்கையில் மேலும் 43 கொரோனாத் தொற்றாளர்கள் உயிரிழந்துள்ளனர்

16 ➤

## கொரோனாவால் வவு.வில் பெண் சாவு

வவுனியா, ஜூலை 10
கொரோனாத் தொற்றால், வவுனியாவில் பெண் ஒருவர் உயிரிழந்தார் என்று

16 ➤

# அரசின் அராஜகங்களுக்கு எதிராக சுதந்திர சதுக்கத்தில் ஆர்ப்பாட்டம்

### சஜித் தலைமையில் பலர் பங்கேற்பு



கொழும்பு, ஜூலை 10
ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்யும் அரசின் அராஜகங்களைக் கண்டித்தும், நாட்டில் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துமாறு வலியுறுத்தியும் கொழும்பில் நேற்று ஆர்ப்பாட்டம் நடத்தப்பட்டது. 'ஜனநாயகத்தைப் பாதுகாப்போம் மனித சுதந்

19 ➤

## தரம் 5, ஏ.எல். பரீட்சைகளின் திகதிகள் அறிவிப்பு

கொழும்பு, ஜூலை 10
தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை எதிர்வரும் ஒக்ரோபர் 3ஆம் திகதியும், கல்விப்

19 ➤

## சுதந்திர சதுக்கத்தில் நான் சுதந்திரத்தை தேடுகிறேன்

### ஆர்ப்பாட்டத்தில் மனோ தெரிவிப்பு



கொழும்பு, ஜூலை 10
"அன்று ஒரே நாடு, ஒரே சட்டம் என்று நீங்கள் தானே சொன்னீர்கள். இன்று, பொதுமக்களுக்கு ஒரு சட்டம்,

19 ➤

# ஆர்ப்பாட்டம் நடத்தினால் கூண்டோடு கைதாவீர்கள்

### சர்வாதிகாரத் தொனியில் அமைச்சர் வீரசேகர எச்சரிக்கை



கொழும்பு, ஜூலை 10
யார் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டாலும் அவர்கள் உடனடியாகக் கைதுசெய்யப்படுவார்கள். தனிமைப்படுத்தல் சட்டம் தொடர்பாக சுகாதாரப் பணிப்பாளரால் விடுக்கப்பட்டுள்ள உத்தரவுக்கமையவே ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுபவர்களைப் பொலிஸார் கைது செய்து வருகின்றனர். இந்தக் கைது நடவடிக்கைகள் ஒருபோதும் நிறுத்தப்படாது" என்று பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

19 ➤

## தனிமைப்படுத்தல் சட்டத்தின்படி போராட்டத்தை தடுக்கமுடியாது

### ரணில் விக்கிரமசிங்க எம்.பி. சுட்டிக்காட்டு

கொழும்பு, ஜூலை 10
தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு இணங்க, போராட்டங்களை நடத்த வேண்டாம் என தடை செய்ய அதிகாரம் கிடையாது. தனிமைப்படுத்தல் சட்டத்தின் ஊடாக அடிப்படை உரிமைகளை மீறும்

19 ➤



## வீட்டுத் திட்டம் தொடர்பில் 'உதயனுக்கு' 35 முறைப்பாடுகள்

யாழ்ப்பாணம், ஜூலை 10
கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள

19 ➤

## அந்திமத்தை நெருங்குகிறது அரசு

### பாட்டலி சம்பிக்க தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10
"ஜனநாயக கொள்கைகளுக்கு முரணாகவே அரசு செயற்படுகிறது. நாட்டு மக்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசுக்கு எதிராகப்

19 ➤

## நவாலி தேவாலய படுகொலையின் 26ஆம் ஆண்டு நினைவேந்தல்

யாழ்ப்பாணம், ஜூலை 10
யாழ்ப்பாணத்தின் நவாலி சென்.பீற்றர் தேவாலயத்தில் படுகொலை செய்யப்பட்டவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத் தூபியில் நேற்று அஞ்சலி நடைபெற்றது.
எம்.கே. சிவாஜிலிங்கம், அனந்தி சசிதரன் மற்றும் பொதுமக்கள் பலரும் அங்கு அஞ்சலி செலுத்தினர். நாட்டின் அசாதாரண சூழ்

19 ➤

## பயனாளிகள் தெரிவுக்கு அதிகாரிகளே பொறுப்பு

### அமைச்சின் செயலர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10
வீட்டுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களில் வெளிவந்த செய்திகள் குறித்து, மீள்குடியேற்ற செயலணியின் ஆலோசகர் லியனகே, மாவட்டச் செயலரிடம் கேள்வியும்

19 ➤

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற்சங்கவாதிகள் மீதான அத்துமீறலை ஏற்கமுடியாது

## பல்கலை. ஊழியர் சங்கம் கண்டனம்

**யாழ்ப்பாணம், ஜூலை 10**

**ஜோசப் ஸ்டாலின் உட்பட்ட தொழிற்சங்கவாதிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்களின் மீதான அத்துமீறல்களைக் கண்டிக்கின்றோம் என்று பல்கலைக்கழக ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக்குறிப்பில் உள்ளதாவது;

இலங்கை ஆசிரியர் சங்கத்தின் முக்கிய தலைவரான தோழர் ஜோசப் ஸ்டாலின் உட்பட்ட தொழிற்சங்கவாதிகள் மற்றும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் 31 பேர் நேற்றுமுன்தினம் வரை கொழும்பில் இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது கைது செய்யப்பட்டு பின்னர் நீதிமன்றில் பிணையில் விடுவிக்கப்பட்ட போதும் நீதிமன்ற உத்தரவை மீறி சம்பந்தப்பட்டோர், எதுவென அறிவிக்கப்படாத கொரோனோ இடைத்தங்கல் முகாமொன்றுக்கு அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்று எமக்கு தகவல் கிட்டியுள்ளது. குறித்த ஆர்ப்பாட்டமானது ஜோன் கொத்தலாவலை பாதுகாப்பு பல்கலைக்கழகம் தொடர்பாக நாடாளுமன்றத்தில் விவாதிக் கப்பட விருந்த நிலையில், கல்விச் சுதந்திரத்தை வலியுறுத்தி இடம்பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு தொழிற்சங்கம் என்ற வகையிலும் நியாயத்துக்காக பாடுபடுகின்ற ஒரு அமைப்பு என்ற ரீதியிலும் தோழர் ஜோசப் ஸ்டாலினுக்கும் அவரது போராட்ட சகாக்களுக்கும் ஏற்பட்டுள்ள மோசமான நிலை குறித்து கவனம்செலுத்த வேண்டியது எமது கடமையாகும். இலங்கை ஆசிரியர் சங்கமானது எமது பல்கலைக்கழக ஊழியர் சங்கத்துடன் தோழமை உறவு பூண்டு, தொழிற்சங்க மற்றும் மனித உரிமை பொதுத் தளங்களில் மே தினம் உள்ளிட்ட பல செயற்பாடுகளில் எமது சங்கத்துடன் இணைந்து செயற்படுகின்றதோடு, எமது சங்க அங்கத்தினர் மீதான உள்ளக விசாரணைகளுக்கு அவர்களின் சார்பில் எவ்வித எதிர்பார்ப்புமின்றி முன்னிலையாகி உதவி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

உலகை நெருக்கடிக்கு உள்ளாக்கியிருக்கும் கொரோனா இலங்கையையும் விட்டுவைக்கவில்லை என்பது உண்மைதான் எனினும் பெருந்தொற்றுக் கால சுகாதார நடைமுறைகள் என்ற போர்வையில் நியாயமான மக்கள் உரிமைச் செயற்பாடுகளையும் சுகாதார நடைமுறைகளையும் பின்பற்றி நடைபெறும் ஜனநாயக ரீதியிலான மக்கள் போராட்டங்களையும் ஒடுக்கும் அரசின் செயற்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது- என்றுள்ளது. (ப)

# குறைவடையும் கைது: நேற்று 266 பேர் மட்டும்

கொழும்பு, ஜூலை 10

தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்படுபவர்களின் எண்ணிக்கை படிப்படியாக குறைவடைந்து வருகின்றது. நேற்று அதிகாலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணி நேரத்தில் 266 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

அத்துடன், இதுவரை தனிமைப்படுத்தல் விதிகளை மீறினர் என்ற குற்றச்சாட்டில் 48 ஆயிரத்து 808 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஓ.4)

## மன்னார் மறைமாவட்டத்துக்கு

# குரு முதல்வராக கிறிஸ்துநாயகம்

மன்னார், ஜூலை 10

மன்னார் மறைமாவட்ட குருமுதல்வராக அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளாரை மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை நியமித்துள்ளார்.

கடந்த 15 வருடங்களுக்குப் பின் கடந்த வியாழக்கிழமை இந்த புதிய நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

மன்னார் மறைமாவட்டத்தின் முன்னாள் ஆயர் அமரர் மேதகு இராயப்பு யோசப் ஆண்டகையால்கடந்த 2006 ஆம் அண்டு குருமுதல்வராக நியமிக்கப்பட்ட அருட்பணி அ.விக்ரர் சோசை அடிகளார் கடந்த 15 வருடங்களாக ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை, ஆயர் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை மற்றும் ஆயர் இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகை ஆகிய மூன்று ஆயர்களின் கீழ் குரு முதல்வராக இருந்தவேளையிலேயே தற்பொழுது இவர் இடமாற்றப்பட்டு புதிய குரு முதல்வராக அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் நியமிக்கப்பட்டுள்ளார்.

மன்னார் மறைமாவட்டத்துக்கு நடப்புவருட புதிய குருமுதல்வராக நியமிக்கப்பட்டுள்ள அருட்பணி பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் மன்னார் மறைமாவட்டத்துக்கு மூன்றாவது குரு முதல்வராவார்.

அவர் மன்னார் நானாட்டான் பகுதியைச் சேர்ந்தவர் என்று தெரிவிக்கப்பட்டது. (ப-60)

# தாயைக் கைவிடவில்லை குடும்பத்தினர் விளக்கம்

யாழ்ப்பாணம், ஜூலை 10

வயோதிபத் தாயை பராமரிக்கவில்லை என்று வெளியான தகவல் உண்மைக்குப் புறம்பானது. இந்தத் தகவல் எமது குடும்பத்துக்கு களங்கம் ஏற்படுத்தும் வகையில், சிலரால் காழ்ப்புணர்ச்சியுடன் திரிபுபடுத்தப்பட்டு பரப்பப்பட்டுள்ளது என்று குறிப்பிட்ட கோப்பாய் பகுதியில் கவனிபாரின்றி இருந்தார் எனக் கூறப்பட்ட வயோதிபத் தாயின் குடும்பத்தினர் தெரிவித்தனர்.

கடந்த மாதம் 10 ஆம் திகதி உதயன் பத்திரிகையின் 10 ஆம் பக்கத்தில் வெளியான "வயோதிபத் தாயைக் கைவிட்ட பிள்ளைகள்" என்ற செய்தி தொடர்பாக, அவரது குடுத்தினர் உதயன் பணிமனைக்கு வந்து விளக்கமளித்தனர்.

இந்த விடயம் தொடர்பில் கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருந்தமை உண்மை. பொலிஸார் முறைப்பாட்டாளரையும், எம்மையும் அழைத்து விசாரித்தனர். அதன்பின்னர் சமரசப்படுத்தி விடுவித்தனர்.

வயோதிபத் தாயை பராமரிக்கவில்லை என்று கூறப்படுவது உண்மைக்குப் புறம்பானது. அந்தப் பகுதியில் உள்ள அயலில் உள்ள சிலர் தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியால் இவ்வாறான தகவலைப் பரப்பியுள்ளனர். நாம் எமது தாயாரை சரியான முறையிலேயே பராமரிக்கின்றோம் என்று தெரிவித்தனர். (எ)

# அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகள்: வியாபாரிகளுக்கு எதிராக நடவடிக்கை

## யாழ்.மாவட்டச் செயலக அளவீட்டு அலகு அறிவிப்பு

யாழ்ப்பாணம், ஜூலை 10

யாழ்ப்பாண மாவட்டத்தில் அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பயன்படுத்துவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவு அறிவித்துள்ளது.

இது தொடர்பில் மாவட்டச் செயலர் க.மகேசன்தெரிவிக்கையில்,

தற்போதுள்ள கொரோனா இடர் கால சூழ்நிலையில் மாவட்ட வியாபாரிகளால் வியாபார நடவடிக்கைக்கு பயன்படுத்தும் நிறுத்தல் கருவிகள் தொடர்ந்தும் மாவட்டச் செயலக அளவீட்டு அலகுகள் நியமங்கள் மற்றும் சேவைகள் பிரிவினரால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றன.

இதன் போது சில வியாபாரிகள் அரச அங்கீகாரமற்ற நிறுக்கும் கருவிகளை பயன்படுத்தி வருகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான வியாபாரிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எதிர்வரும் நாள்களில் எடுக்கப்படவுள்ளது. எனவே அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பயன்படுத்தும் வியாபாரிகள் அதனை உடனடியாக நிறுத்திக்கொள்ள வேண்டும். சட்டத்துக்கு முரணான வகையில் அரச அங்கீகாரமற்ற நிறுத்தல் கருவிகளை பாவிப்போருக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கு அளவீட்டு அலகுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது- என்றார். (ஐ)

# அனுமதியற்ற வியாபார நிலையங்கள் வவுனியாவில் அகற்றம்

வவுனியா, ஜூலை 10

வவுனியா தாண்டிக்குளம் ஏ9 வீதிக்கரையில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற வியாபார நிலையங்கள் நேற்று அகற்றப்பட்டன. ஏ9 வீதி மற்றும் பஸ் பாதைக்கு அருகாமையில் உள்ள பகுதிகளில் சிலரால் தற்காலிக கொட்டில்கள் அமைக்கப்பட்டு வியாபார செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டதுடன் சுற்றுவேலிகளும் அமைக்கப்பட்டிருந்தன.



இந்த நிலையில் நேற்றுக்காலை குறித்த பகுதிக்குச் சென்ற வவுனியா பிரதேச செயலர் நா.கமலதாசன் தலைமையிலான குழுவினர் குறித்த பகுதியில் அமைக்கப்பட்டிருந்த அனுமதியற்ற விபாபார நிலையங்களை அகற்றிச்சென்றனர். (ஐ-110)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டில் காட்டுச்சட்டமா நடைமுறையாகின்றது?

## சுகாதாரத் தரப்பின் அதிகாரத்தை பொலிஸார் எவ்வாறு செயற்படுத்த முடியும் - சபையில் சஜித் கேள்வி

**கொழும்பு, ஜூலை 10**

**நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டவர்களை, அன்டிஜென் அல்லது பி.சி.ஆர். பரிசோதனைக்குகூட உட்படுத்தாமல் பலவந்தமாக பொலிஸார் இடைத்தங்கல் முகாம்களுக்கு கொண்டுசெல்வது அரசமைப்பிலுள்ள அடிப்படை மனித உரிமைக்கும் எதிரான செயற்படாகும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித். பிரேமதாச நாடாளுமன்றத்தில் நேற்று சுட்டிக்காட்டினார்.**

தொழிற்சங்க போராட்டத்தில் ஈடுபட்ட தொழிற்சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் உட்பட மேலும் பலர் கைதுசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு சுட்டிக்காட்டினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

போராட்டங்களில் ஈடுபட்டவர்களை நேற்று (நேற்றுமுன்தினம்) பொலிஸார் கைதுசெய்தனர். நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தினர். நீதிமன்றத்தால் பிணை வழங்கப்பட்டது. அங்கு ஒரு சுகாதாரப் பரிசோதகர்கூட இருக்கவில்லை. அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகூட இடம்பெறவில்லை. இந்நிலையில் பிணையில் வந்தவர்களை பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் முடிவை பொலிஸார் எடுத்துள்ளனர். இது அரசமைப்பிலுள்ள அடிப்படை மனித உரிமையையும், தனிமைப்படுத்தல் விதிமுறை களையும் மீறும் செயலாகும். சுகாதார அதிகாரிகள் செய்யவேண்டியதை பொலிஸார் தமது கைகளுக்குள் எடுத்து செயற்பட்டுள்ளனர். பி.சி.ஆர். அல்லது அன்டிஜென் பரிசோதனை நடத்தாமல் அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும் முடிவை பொலிஸார் எவ்வாறு எடுக்க முடியும்? இந்நாட்டில் காட்டுச்சட்டமா நிலவுகின்றது, என்று கேள்வி எழுப்பினார். (ஒ,44)

# பலவந்த தனிமைப்படுத்தல் கடத்தலுக்கு ஒப்பான செயல்

## ஜே.வி.பி. தெரிவிப்பு

கொழும்பு, ஜூலை 10

நீதிமன்ற உத்தரவின்றி, பொலிஸாரால் அழைத்துச்செல்லப்பட்டு பலவந்தமாக தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதானது கடத்தலுக்கு ஒப்பான செயலாகும். இதற்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு எதிர்ப்பார்த்துள்ளோம் என்று ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க நாடாளுமன்றத்தில் நேற்று தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் போராட்டங்கள் தொடர்பில் சுகாதார சேவைகள் பணிப்பாளரால், பொலிஸ்மா அதிபருக்கு கட்டளையொன்று பிறப்பிக்கப்பட்டுள்ளது. அதில் எதிர்ப்பு நடவடிக்கை மற்றும் போராட்டங்களால் கொரோனா பரவுவதற்கான வாய்ப்பு இருப்பதால் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. நாட்டில் தற்போது பொதுப்போக்குவரத்து இடம்பெறுகின்றது. பஸில் ராஜபக்ச நாடாளுமன்றம் வந்ததையொட்டி அவருக்கு வாழ்த்து தெரிவித்து கொண்டாட்டம் இடம்பெறுகின்றது. இவைமூலம் பரவல் இடம்பெறாதா? எனவே, மேற்படி கட்டளையானது அரசியல் வேட்டையாகும்.

கொரோனா வைரஸ் பரவலைக்கட்டுப்படுத்துவதை இலக்காகக்கொண்டு எடுக்கப்பட்ட தீர்மானம் அல்ல. மாறாக மக்களின் நியாயமான எதிர்ப்பு மற்றும் போராட்டங்களை ஒடுக்குவதற்கான தீர்மானமாகும். அரசமைப்பிலுள்ள அடிப்பமை உரிமை மற்றும் தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு எதிரான கட்டளையாகும். பத்தரமுல்லையில் நேற்று (நேற்றுமுன்தினம்) போராட்டத்தில் ஈடுபட்ட 33 பேர் கைதுசெய்யப்பட்டனர். கொழும்பு நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர். அவர்களை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதற்கு பொலிஸார் அனுமதி கோரினர். எனினும், நீதிமன்றம் அனுமதி வழங்கவில்லை. இந்நிலையில் பிணை வழங்கப்பட்டவர்கள் பலவந்தமாக பஸ்ஸில் ஏற்றப்பட்டு முல்லைத்தீவு நோக்கி தனிமைப்படுத்தலுக்காக கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். பிக்குகள், பெண்கள் உட்பட பலர் அதில் உள்ளனர். இவ்வாறு கைது செய்வதற்கோ, கடத்திச்செல்வதற்கோ தனிமைப்படுத்தல் சட்டம் ஊடாக பொலிஸாருக்கு அனுமதி வழங்கப்படவில்லை. இது முழுமையாக அரசியல் பழிவாங்கல் வேட்டையாகும். இதற்கு எதிராக அடிப்படை உரிமை வழக்கு தாக்கல் செய்வதற்கு எதிர்பார்க்கின்றோம்- என்றார். (ஒ.44)



# அடைக்கலம் அறக்கட்டளை அங்குரார்ப்பண நிகழ்வு

மன்னார்,ஜூலை 10

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் சிந்தனையில் நிறுவப்பட்ட 'அடைக்கலம் அறக்கட்டளை' இன் அங்குரார்ப்பண நிகழ்வு மன்னார் ரெலோ அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது.

பின்தங்கிய குடும்பங்களில் உள்ள பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டமாக பல்கலைக்கழக மாணவர்கள் இருவருக்கு ஊக்குவிப்புத் தொகை வழங்கப்பட்டது.

தொடர்ச்சியாக ஏனைய மாணவர்கள் தெரிவுசெய்யப்பட்டு இந்த ஊக்குவிப்புத் தொகை வழங்கப்படும் என்று குறித்த அறக்கட்டளையின் நிர்வாகம் தெரிவித்துள்ளது. நாடாளுமன்ற உறுப்பினரின் செயலாளர் டானியல் வசந் தலைமையில் நடைபெற்ற ஆரம்ப நிகழ்வில் தமிமீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மாவட்ட அமைப்பாளரும்,மன்னார் பிரதேச சபை உறுப்பினருமான ஏ.ரி.மோகன்ராஜ் கலந்துகொண்டார். (ஐ-56)



## நாட்டை

# மூடினால் திற திறந்தால் மூடு

## எதிரணியின் பரப்புரை இது

கொழும்பு, ஜூலை 10

கொரோனாவை வைத்தும் அரசியல் நடத்துவதற்கு எதிரணி முற்படுகின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம். போரை முடிவுக்கு கொண்டு வந்ததுபோல, கொரோனாத் தொற்றையும் ஒழித்து நாட்டை வெற்றிபெறவைப்போம் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐந்தாண்டு காலப்பகுதிக்குள் இந்த நாட்டையே நல்லாட்சி அரசு சீரழித்தது. இதனால் தான் 69 லட்சம் பேர் எங்களுக்கு வாக்களித்து ஆட்சிக்கு கொண்டுவந்தனர்.

தற்போது உலகம் முழுவதும் கொரோனா தொற்று பரவிவருகின்றது. பொருளாதார மட்டத்தில் நாடுகளை மண்டியிட வைத்துள்ளது. அயல்நாடான இந்தியா உட்பட பலம்பொருந்திய நாடுகளில்கூட நெருக்கடி நிலை நீடிக்கின்றது. இந்நிலையில் தடுப்பூசி திட்டத்தை விரிவுபடுத்தி நாட்டை மீளத் திறந்து, முன்னோக்கி பயணிப்பதற்கான வேலைத்திட்டங்களை எமது அரசு முன்னெடுத்து வருகின்றது. இப்பணிக்கு ஒத்துழைப்பு வழங்காமல், நாட்டை மூடுமாறும், அவ்வாறு மூடினால் திறக்குமாறு வலியுறுத்தியும் எதிரணி கருத்து வெளியிடுகின்றது. கொரோனாவை வைத்தும் அரசியல் நடத்துவதற்கு முற்படுகின்றது. இதற்கு இடமளிக்கமாட்டோம். இந்நாட்டில் போரை முடிவுக்கு கொண்டுவந்ததுபோல கொரோனாவையும் ஒழித்து நாட்டை வெற்றிபெற வைப்பதற்கான பொறுப்பை ஏற்கின்றோம்- என்றார். (ஒ.44)





# முதல் கட்டமாக தலைமன்னாரில் செலுத்தப்பட்டது பைசர் தடுப்பூசி

மன்னார், ஜூலை 10

மன்னார் மாவட்டத்தில் முதல் கட்டமாக நேற்று வெள்ளிக்கிழமை பைசர் தடுப்பூசி செலுத்தும் பணி ஆரம்பிக்கப்பட்டது. மன்னாரில் உள்ள கரையோரப் பிரதேசங்களில் உள்ள அபாயம்கூடிய கிராமங்கள் அடையாளம் காணப்பட்டு முன்னுரிமை வழங்கப்பட்டு குறித்த கிராமங்களின் மக்களுக்கு கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டது.

தலை மன்னாரில் 5 கிராம அலுவலகர் பிரிவுகளில் வாழும் 30 வயதுக்கு மேற்பட்ட சகலருக்கும் தலைமன்னார் பியர் றோமன் கத்தோலிக்க தமிழ் கலவன் பாடசாலை மற்றும் தலைமன்னார் புனித லோறன்சியா ஆலய வளாகம் போன்ற இடங்களில் வைத்து தடுப்பூசி செலுத்தப்பட்டது. மன்னார் மாவட்டத்துக்கென 20 ஆயிரம் பைசர் தடுப்பூசி வழங்கப்பட்ட நிலையில் முதல் கட்டமாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தலைமையில் முன்னெடுக்கப்பட்ட குறித்த நடவடிக்கையில் பொதுச் சுகாதார மருத்துவ அதிகாரிகள், தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவுக்கான மருத்துவ அதிகாரி மற்றும் மன்னார் பிரதேச செயலாளர் உட்பட சுகாதாரத்துறையினர் கடமைகளில் ஈடுபட்டனர். இன்று சனிக்கிழமை பேசாலை, வங்காலை, முத்தரிப்புத்துறை மற்றும் மடு ஆகிய பகுதிகளில் குறித்த தடுப்பூசி செலுத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டது (ப-56)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொற்றாளர்கள் அதிகரித்தாலும் மக்கள் அச்சமடைய வேண்டாம்

## கிடப்பிலுள்ள விவரங்களே இனி வெளியிடப்படும்



**கொழும்பு,ஜூலை 10**
**நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை இனி அதிகரிக்கக்கூடும். எனினும் பொதுமக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை. ஏற்கனவே கிடப்பில் உள்ள விவரங்களே இனி அறிக்கையாக வெளியிடப்படும். அதனால் தொற்றாளர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கலாம்.**

இவ்வாறு பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் சங்கத்தின் தலைவர் உபுல் ரோஹன தெரிவிக்கையில்,

சகல பி.சி.ஆர். பரிசோதனைகளையும் ஆய்வுக்குட்படுத்த நடவடிக்கைகளை வழமை போல் மேற்கொண்டு வருகின்றோம்.

அதனால் அதிகளவான பி.சி.ஆர். மாதிரிகள் இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்துக்கு இந்த வாரத்தில் கிடைக்கும் என்று எதிர்பார்க்கிறோம்.


அரச இரசாயன பகுப்பாய்வுத் திணைக்களத்தின் பணிகள் வழமைக்குத் திரும்பியதால், அதிகளவான பி.சி.ஆர். மாதிரிகள் பரிசோதனைக்குட்படுத்தப்படும் .

இதனால் நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும். இது குறித்து பொதுமக்கள் அச்சம்கொள்ளத் தேவையில்லை.

கடந்த காலத்தில் பரிசோதனைக்குப்படுத்தப்படாத அனைத்து துரித அன்டிஜென் மற்றும் பி.சி.ஆர். பரிசோதனைகளை பரிசோதனைக்குட்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறையவில்லை. இருப்பினும், தற்போதைய நிலையில் காணப்படும் கொரோனாத் தொற்றார்களைவிட எதிர்வரும் நாள்களில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்கலாம் - என்றார். (ஒ.4)

# ஒட்டுசுட்டானில் குருக்களுக்கு கொரோனா



முல்லைத்தீவு, ஜூலை 10
ஒட்டுசுட்டானில் குருக்கள் ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழாவை பூசை வழிபாடுகளுடன் மட்டும் நடத்திச்செல்லுமாறு சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர்.

திருவிழாவில் கலந்துகொள்ளும் குருக்கள் மற்றும் நிர்வாகத்தினர் உள்ளிட்ட 15 பேருக்கு கடந்த 7 ஆம் திகதி பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது. அதன் முடிவுகள் நேற்றுமுன்தினம் இரவு வெளியாகின. அதில் ஒட்டுசுட்டான் பிரதேசத்தைச் சேர்ந்த இருவருக்கு கொரோனாத் தொற்று இருப்பது உறுதிப்படுத்தப்பட்டது.

பளம்பாசி பகுதியைச் சேர்ந்த ஒருவரும், ஒட்டுசுட்டான் ஆலயக் குருக்கள் ஒருவரும் தொற்றுக்கு உள்ளாகியிருந்தனர். அவர்கள் கொரோனா இடைத்தங்கல் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்பட்டனர். இதனைத் தொடர்ந்து ஒட்டுசுட்டான் தான்தோன்றீஸ்வரர் ஆலயத் திருவிழா, வெளியில் இருந்து பத்தர்கள் எவரும் வருகைதாராதவாறு ஆலயத்தின் வெளிக்கதவுகள் சாற்றப்பட்டு இடம்பெற வேண்டும் என்று சுகாதாரப் பிரிவினர் அறிவித்துள்ளனர். (ப-19)

# அமைச்சர் பஸிலால் மாற்றங்கள் ஏற்படாது

## ஐ.ம. சக்தி தெரிவிப்பு

கொழும்பு,ஜூலை 10
புதிய நிதி அமைச்சராகப் பதவி ஏற்றுள்ள பஸில் ராஜபக்சவால் மாற்றங்கள் எவையும் ஏற்படப்போவதில்லை என்று ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திசாநாயக்க தெரிவிக்கையில்,

ஆளும் கட்சியின் முன்வரிசை அமைச்சர்கள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களில் அதிகமானோர் புதிய நிதி அமைச்சர் பஸில் ராஜபக்ச பதவியேற்கும் நேரத்தில் நாடாளுமன்றில் இருக்கவில்லை. கடந்த ஒன்றரை வருடங்களாக பஸில் ராஜபக்ச கட்சிக்குள் உயர் பதவியிலிருந்தார். நாங்கள் நினைக்கும் அளவுக்கு புதிய நிதி அமைச்சராகப் பதவி ஏற்றுள்ள பஸிலால் நாட்டில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்த முடியாது.

இந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் ஆகியோரே தோற்றுவிட்டனர். இனினும் இவரால் மட்டும் நன்மை கிட்டப் போவதில்லை - என்றார். (ஒ.4)


# பாரவூர்தி குடைசாய்ந்ததில் இளைஞர் ஒருவர் உயிரிழப்பு

வவுனியா,ஜூலை 10
வவுனியா புளியங்குளம் பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

கிளிநொச்சியில் இருந்து புத்தளம் நோக்கி பொருள்களை ஏற்றிச்சென்ற பாரவூர்தி புளியங்குளம் பகுதியில் சென்றுகொண்டிருந்த போது, கட்டுப்பாட்டை இழந்து குடைசாய்ந்து விபத்துக்குள்ளானது.


விபத்தில் காயமடைந்தவர்கள் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். எனினும் சிகிச்சை பயனின்றி ஒருவர் உயிரிழந்துள்ளதுடன், வாகனத்தின் சாரதி படுகாயமடைந்தார்.

சம்பவத்தில் மஸ்கலியா பகுதியை சேர்ந்த பிரவீன் வயது - 21 என்ற இளைஞனே உயிரிழந்தார். விபத்து தொடர்பாக புளியங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (ஐ-110)



# நாமல் ராஜபக்ச பிரதமராவது கூட்டமைப்புக்கு விருப்பம்

## இப்படிச் சொல்கிறார் சாணக்கியன் எம்.பி.



கொழும்பு, ஜூலை 10
நாமல் ராஜபக்சவை பிரதமராக்கப் போவதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. கட்சி பேதமின்றி இவ்வாறு இளைஞர் ஒருவர் பிரதமரானால் எங்களுக்கும் விருப்பம் தான் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் அவர் இது தொடர்பில் தெரிவிக்கையில்;

இளைஞர் யுவதிகளுக்கு அதிக சந்தர்ப்பங்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும். இலங்கையில் இன்று பென்சன் வாங்கிய பின்னர் நாட்டுக்குச் சேவையாற்றும் முறையொன்று உருவாகியுள்ளது. 60 வருடங்கள் தமது குடும்பத்துக்காக உழைத்து அரசின் வரப்பிரசாதங்களைப் பெற்றுவிட்டு, பென்சன் வாங்கிய பின்னர் தான் நாட்டுக்குச் சேவையாற்ற வேண்டும் என்ற உணர்வுடன் சிலர் உள்ளனர். எனவே இளைஞர் யுவதிகளுக்கு இளமைக் காலங்களில் சந்தர்ப்பங்களைப் பெற்றுக்கொடுங்கள். வேட்பு மனுத்தாக்கலில் மாத்திரம் 100க்கு 25 வீதம் இளைஞர் யுவதிகளுக்கு வழங்குவதால் மாத்திரம் இளைஞர் யுவதிகளின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்க முடியாது. தேர்தல் முறையில் மாற்றம் செய்யப்பட வேண்டும். மாவட்டத்தில் போட்டியிடும் அமைச்சர்கள் உள்ளிட்ட சிரேஷ்ட அரசியல்வாதிகள், பணம் படைத்தோரிடம் போட்டியிட்டு சாதாரணமானவர்கள் வெற்றிபெற முடியாது. உலக நாடுகளை எடுத்துக் கொண்டால் பின்லாந்தில் இளம் வயதுடைய பெண் பிரதமர் உள்ளார். இத்தாலி போன்ற நாடுகளில் 33 வயதில் நிதியமைச்சர் உள்ளார். நியுசிலாந்து பிரதமருக்கு 39 வயது. இலங்கையில் அவ்வாறான இளம் பிரதமர் ஒருவர் வர வேண்டும் என்று நான் நம்பிக்கை கொண்டுள்ளேன். அரசில் உள்ள இளம் தலைவர்களுக்கு அதிகாரத்தை வழங்க வேண்டும் என்று நாங்கள் எதிர்பார்க்கின்றோம். துமிந்த திசாநாயக்க போன்றவர்கள் இலங்கையில் இளம் அமைச்சர்களாக உள்ளனர். அவ்வாறான இளம் தலைவர்களுக்கு அதிக அதிகாரங்களை வழங்க வேண்டும். கட்சி பேதங்களுக்கு அப்பால் இளைஞர்களுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும் என்பதற்காகவே இதனைச் சொல்கின்றேன். நாமல் ராஜபக்சவை பிரதமராக்கப் போவதாக சமூக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின. கட்சி பேதமின்றி இவ்வாறு இளைஞர் ஒருவர் பிரதமரானால் எங்களுக்கும் விருப்பம்தான். எனினும் நாமல் ராஜபக்ச மூன்றாவது சக்கரமாக பஸில் உள்ளார் என்று கூறினார். அந்த இடத்துக்கு அவர் வந்திருக்க முடியும். இலங்கைக்கு இளம் பிரதமர் ஒருவர் வந்தால் நல்லது - என்றார். (ப-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிபொருள், எரிவாயு இலங்கையில் உற்பத்தி?

## விரைவில் வர்த்தமானி

**கொழும்பு,ஜூலை 10**

**இலங்கைக்குத் தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுவை எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் உள்நாட்டிலேயே உற்பத்திசெய்துகொள்வதற்காக, புதிய பெற்றோலிய திருத்தச்சட்டம் இரண்டு வாரங்களுக்குள் வர்த்தமானியில் வெளியிடப்படும் என்று அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.**

நாடாளுமன்றில் சபாநாயகர் அறிவிப்பு மனுக்கள் சமர்ப்பணத்தைத் தொடர்ந்து இடம்பெற்ற கேள்வி நேரத்தில் எதிர்க்கட்சி உறுப்பினர் சமிந்த விஜேசிறியால் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கும்போதே அமைச்சர் கம்மன்பில இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எரிபொருள் பிரச்சினைக்கு உடனடித் தீர்வுகளுக்குப் பதிலாக நடுத்தர மற்றும் நீண்டகால தீர்வுகள் அவசியமாகும்.

நாட்டுக்குத் தேவையான எரிபொருள் மற்றும் எரிவாயுவை உள்நாட்டிலேயே தயாரித்துக்கொள்வதற்கான திட்டமொன்றை அரசு முன்னெடுத்துள்ளது.

இதன்மூலம் வருடமொன்றுக்கு 350 மில்லியன் டொலரை எம்மால் சேமித்துக் கொள்ள முடியும். அதாவது உர இறக்குமதிக்காக நாம் செலவிடும் அளவிலான நிதியை, உள்நாட்டில் எரிபொருள் உற்பத்தியை மேற்கொள்வதன் ஊடாக கையிருப்பில் வைத்துக்கொள்ள முடியும்.

எரிபொருள் விலை அதிகரிப்பு மற்றும் அதன் தேவை தொடர்பில் நீண்டகாலத் தீர்வுகளே அவசியமாகவுள்ளன.

எரிபொருள் விலை அதிகரித்தவுடன் பொதுமக்கள் அச்சத்துக்கு உள்ளாகுகின்றனர். ஆனால், அரேபிய நாடுகள் எரிபொருள் விலை அதிகரித்தால் மகிழ்ச்சியடைகின்றன.

காரணம் விலை அதிகரித்தால் அவர்களது வருமானமும் உயர்வடையும். எமது நாட்டில் எரிபொருள் மற்றும் எரிவாயு உற்பத்தியை மேற்கொள்ள முடியும்.

1964 ஆம் ஆண்டு பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் ஊடாக இதற்கான செயலணியொன்று உருவாக்கப்பட்டிருந்தது. என்றாலும் அந்த இலக்கை வெற்றிகொள்ள முடியாது போனது.

எதிர்வரும் இரண்டு வாரங்களில் பெற்றோலியச் சட்டம் வர்த்தமானியில் பிரசுரிக்கப்படும். இதன் பிரதிபலனாக எதிர்வரும் நான்கு ஆண்டுகளில் எரிபொருள் மற்றும் எரிவாயு உற்பத்திசெய்யப்படும் நாடுகளின் பட்டயலில் இலங்கையும் இருக்கும். எமக்குத் தேவையான எரிபொருளும் இங்கேயே உற்பத்தி செய்யப்படும்- என்றார். (ஒ.4)



# தேர்தல் சட்டங்களை மறுசீரமைக்க 115 முன்மொழிவுகள் சமர்ப்பிப்பு

கொழும்பு,ஜூலை 10

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள நாடாளுமன்ற விசேட குழுவுக்கு, 115 முன்மொழிவுகள் மற்றும் யோசனைகள் கிடைக்கப்பெற்றுள்ளன என்று குழுவின் தலைவரும், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருமான தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார். நாடாளுமன்றில் இடம்பெற்ற குழுக் கூட்டம் தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஏற்றுக்கொள்ளப்பட்ட 7 அரசியல் கட்சிகளின் மூலம் யோசனைகள் முவைக்கப்பட்டுள்ளன. எதிர்வரும் 15 ஆம் திகதி வரை அந்தக் கட்சிகளுக்கு யோசனைகளைச் சமர்ப்பிக்க முடியும்.

யோசனைகளை sec.pscelectionreforms2021@parliament.lk எனும் மின்னஞ்சல் முகவரிக்கோ அல்லது செயலாளர், நாடாளுமன்ற விசேட குழு, இலங்கை நாடாராளுமன்றம், சிறிஜயவர்தனபுர கோட்டை எனும் முகவரிக்கோ அனுப்பி வைக்க முடியும்.

தேர்தல் சட்டங்கள் மற்றும் தேர்தல் முறைமையில் மறுசீரமைப்புகளை மேற்கொள்வது தொடர்பில், பொதுமக்களின் யோசனைகளை சபைக்கு சமர்ப்பித்தல் மற்றும் அந்த யோசனைகள் பற்றிய சாராம்சம் தொடர்பில் கூட்டத்தில் அவதானம் செலுத்தப்பட்டது.

உத்தேச மறுசீரமைப்புகள் தொடர்பில் நிபுணர்கள் குழுவொன்றை நியமிப்பது தொடர்பிலும் இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது. இந்தக் குழுக் கூட்டத்தில் அமைச்சர்களான நிமல் சிறிபால டி சில்வா, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ், டக்ளஸ் தேவானந்தா, இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான அநுரகுமார திசாநாயக்க, கபீர் ஹாசீம், ரஞ்சித் மத்தும பண்டார, எம். ஏ. சுமந்திரன், மதுர விதானகே மற்றும் சாகர காரியவசம் ஆகியோர் கலந்துகொண்டனர்- என்றுள்ளது. (ஒ.4)

# லிட்ரோ காஸ் நிறுவனம் கோப் குழுவுக்கு அழைப்பு

கொழும்பு,ஜூலை 10

லிட்ரோ காஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டர்மினல் லங்கா நிறுவனம் ஆகியவற்றை கோப் குழுவுக்கு அழைப்பதற்கும், அரச கணக்காய்வுக்கு உட்படுத்துவதற்கும், இலங்கை காப்புறுதி கூட்டுத்தாபனத்துக்கு, கோப் குழு அறிவுறுத்தல் வழங்கியது. அரச பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு கடந்த புதன்கிழமை கூடியது.

இது தொடர்பான ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசமைப்பின் 20 ஆவது திருத்தத்துக்கு அமைய லிட்ரோ காஸ் லங்கா நிறுவனம் மற்றும் லிட்ரோ காஸ் டர்மினல் லங்கா (தனியார்) நிறுவனம் என்பவற்றை அரச கணக்காய்வுக்கு உட்படுத்த முடியாது என்று குறிப்பிட்டு அந்த நிறுவனங்கள் நீதிமன்றுக்குச் சென்றுள்ளன. இதனால் இந்த நிறுவனங்கள் தொடர்பில் அரச கணக்காய்வு செய்ய முடியாது எனறு கோப் குழுவின் தலைவர் தெரிவித்தார். எனவே அரச கணக்காய்வுக்கு உட்படுவதில்லை என்பதால் இந்த இரண்டு நிறுவனங்களையும் கோப் முன்னிலையில் அழைப்பதற்கு முடியாது. அதனால் இந்த விடயத்தை கலந்துரையாட முடியாது என்று பேராசிரியர் சரித ஹேரத் தெரிவித்தார்.

இந்த இரண்டு நிறுவனங்களின் பங்குகளில் 99 வீதத்துக்கான உரிமை இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்துக்கு காணப்படுவதுடன், நிறுவனம் அரச கணக்காய்வுக்கு உட்படுவதாக கோப் குழுவில் கலந்துகொண்ட உறுப்பினர்களின் நிலைப்பாடாக இருந்தது. எனவே இந்த நிறுவனத்தை கோப் குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றனர். கோப் குழு உறுப்பினர்கள் அனைவரும் இணக்கம் தெரிவித்துள்ளமையால், நிறுவனத்தை குழுவின் முன்னிலையில் அழைப்பதற்கு, விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இலங்கை காப்புறுதிக் கூட்டுத் தாபனத்துக்கு பணிப்புரை விடுக்கப்பட்டது. லிட்ரோ நிறுவனத்தின் பங்குகள் தொடர்பில் பொறுப்புக் கூறுகின்றபோதும், அதன் நிர்வாகம் தொடர்பில் பொறுப்புக்கூறமுடியாது.

பங்குகள் தொடர்பில் தமக்கு நஷ்டம் ஏற்படுமாயின் அவ்வாறான பங்குகளை விற்பனைசெய்வதற்கு நடவடிக்கை எடுக்க முடியும் என்றும் இலங்கைக் காப்புறுதிக் கூட்டுத்தாபன அதிகாரிகள் தெரிவித்தனர். என்றுள்ளது. (ஒ.4)

# சலுகை விலையில் தேங்காய் எண்ணெய்

கொழும்பு,ஜூலை 10

உயர்தர நச்சுத்தன்மையற்ற தேங்காய் எண்ணெய்யை மக்களுக்கு சலுகை விலையில் வழங்கும் திட்டத்தை அமைச்சர் விமல் வீரவன்ச முன்னெடுத்துள்ளார். கொழும்பு அரசியல் பரபரப்படைந்துள்ள நிலையில், அமைச்சர் விமல் வீரவன்ச அமைதிக்கு மத்தியில் தனது அமைச்சின் மூலம் ஒரு புதிய திட்டத்தை ஆரம்பித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்று வெளியிட்டுள்ள செய்தியில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது. மானிய விலையில் தேங்காய் எண்ணெய்யை இந்த மாத இறுதிக்குள் சந்தைக்கு விடுவிப்பதே அமைச்சரின் நோக்கம் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)



# தேரரைக் கொலைசெய்வதற்கு திட்டம் தீட்டிய மற்றொரு தேரர்

கொழும்பு,ஜூலை 10

களுத்துறை இங்கிரிய தீபாலோக விகாரையில் வசித்து வரும் லுணுகம்வெஹர வினீத தேரரை கொலைசெய்வதற்காக, 15 லட்சம் ரூபாவை வழங்கினார் என்ற குற்றச்சாட்டில், அந்த விகாரையின் விகாராதிபதியும் அதற்கான பணத்தைப் பெற்றுக் கொண்ட சாரதி ஒருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வினீத தேரரை கொலைசெய்ய பணம் வழங்கப்பட்டுள்ளது என்று கிடைத்த எழுத்து மூலமான முறைப்பாட்டை அடுத்து மேற்கொண்ட விசாரணைகளின் பின்னர், இருவரும் கைது செய்யப்பட்டனர் என்று மேல் மாகாணத்துக்குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் தெரிவித்துள்ளார்.

இங்கிரியவத்தைப் பிரதேசத்தைச் சேர்ந்த விகாரையில் சாரதியாக பணிப்புரியும் ஒருவர் மூலமாக, கொழும்பு நாராஹேன்பிட்டி 60 ஆவது தோட்டத்தில் வசித்து வரும் பெலவத்தை பொடி இந்த கொலை முயற்சிக்கான ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. இரண்டு வருடங்களாக திட்டம் வகுக்கப்பட்டு வந்துள்ளது. கொலை முயற்சிக்காக விகாராதிபதி 15 லட்சம் ரூபாவை வழங்க இணங்கியுள்ளார். சாரதி ஊடாக நான்கு சந்தர்ப்பங்களில் 11 லட்சம் ரூபா வழங்கப்பட்டுள்ளது. எனினும் அந்தப் பணத்தை உரியவரிடம் வழங்காத சாரதி, தனது வீட்டை நவீனப்படுத்த பயன்படுத்தியுள்ளார். தங்க ஆபரணங்களை கொள்வனவு செய்துள்ளார். களுத்துறையில் மோட்டார் சைக்கிள் ஒன்றையும் கொள்வனவு செய்துள்ளார் என்று விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேக நபர்களான விகாராதிபதி யும், சாரதியும் ஹொரணை நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்படுவர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசிகள் பகிர்ந்து வழங்கல்: முப்படையினருக்கே முன்னுரிமை

## மருத்துவ அதிகாரிகள் சங்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 10

**நாட்டுக்குக் கிடைக்கும் தடுப்பூசிகளை, பகிர்ந்து வழங்கும்போது, முப்படையினரின் கட்டுப்பாட்டில் உள்ள தடுப்பூசி மையங்களுக்கே அதிகளவு தடுப்பூசிகள் வழங்கப்படுகின்றன. இதனால் சுகாதாரத்துறையினரின் மேற்பார்வையில் உள்ள தடுப்பூசி மையங்களுக்கு தடுப்பூசிகள் குறைக்கப்பட்டுள்ளன என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் தெரிவித்துள்ளது.**

இது தொடர்பில் சங்கத்தைச் சேர்ந்த மருத்துவர் ஹன்சமால் வீரசூரிய தெரிவிக்கையில்,

நாட்டில் தடுப்பூசி வழங்கும் நடவடிக்கைகளுக்கு சுகாதாரத்துறையினர் மாத்திரமே பொறுப்பாக இருக்க வேண்டும்.

தொற்றுநோய் பரவும் வேளைகளில் முதலில் மனதில் தோன்றுபவை மருத்துவமனைகளே. எனவே தடுப்பூசிகள் வழங்கும் நடவடிக்கையை முற்றாக சுகாதாரத் தரப்பினரிடம் வழங்க வேண்டும் .

முப்படையால் நிர்வகிக்கப்ப டும் தடுப்பூசி மையங்கள் காரணமாகவே சுகாதாரத்துறையினருக்கு வழங்கப்படும் தடுப்பூசிகளின் எண்ணிக்கை குறைவடைந்துள்ளது.

மேல் மாகாணத்தில் 133 கொவிட் தடுப்பூசி செலுத்தும் நிலையங்கள் காணப்படுகின்ற போதிலும், அந்தத் தடுப்பூசி செலுத்தும் நிலையங்களுக்கு போதிய தடுப்பூசிகள் வழங்கப்படவில்லை.

இராணுவத்தினர் உட்பட ஏனைய தரப்பினர் வழங்கும் உதவிகளைப் பாராட்டுகின்றோம். அதேவேளை தடுப்பூசிகளை செலுத்தும் நடவடிக்கைகளை சுகாதாரத்துறையி னரே முன்னெடுக்க வேண்டும். என்றார். (ஒ.4)

# சிறுவனை கட்டிவைத்து அடித்து சித்திரவதை

## தந்தை கைது



கொழும்பு,ஜூலை 10

8 வயதுச் சிறுவனை கட்டிப் போட்டு அடித்து துன்புறுத்தினார் என்ற குற்றச்சாட்டில் சிறுவனின் தந்தை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் பலாங்கொடை பின்னவல கெப்போக் கீழ் பிரிவு தோட்டத்தில் நடந்துள்ளது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபரின் மனைவி தனது 7 மற்றும் 8 வயதுடைய இரண்டு மகன்களையும், தனது கணவரிடம் ஒப்படைத்து விட்டு மூன்று வருடங்களுக்கு முன்னர் வெளிநாட்டுக்கு பணிப்பெண்ணாகச் சென்றுள்ளார்.

பிள்ளைகளைத் தனியாக வீட்டில் விட்டுவிட்டு தந்தை வேலைக்குச் சென்றுவரும் நிலையில் , குறித்த பிள்ளைகளே வீட்டு வேலைகளையும் செய்து வந்துள்ளனர்.

இந்நிலையில் வேலைக்குச் சென்று இரவு வீடு திரும்பும் தந்தை, மதுபோதையில் வீட்டுக்கு வருவதுடன், பிள்ளைகள் செய்த சிறு சிறு தவறுகளுக்கும் பெரிய அளவில் தண்டனை கொடுத்துள்ளார்.

இதேவேளை 8 வயது மகன் செய்த சிறு தவறொன்றுக்காக கம்பி ஒன்றில் சிறுவனைக் கட்டிப்போட்டு அடித்துள்ளார். அடி வலி தாங்க முடியாது சிறுவன் கதறியுள்ளார். சத்தத்தைக் கேட்டு, பக்கத்து வீட்டிலுள்ளவர்கள் கதவை உடைத்து குறித்த சிறுவனைக் காப்பாற்றியுள்ளனர்.

பின்னர் பிரதேச மக்கள் பின்னவல பொலிஸ் நிலையத்துக்கு தகவல் வழங்கினர். தந்தையைக் கைதுசெய்த பொலிஸார், சிறுவர்கள் இருவரையும் பலாங்கொட மருத்துவமனையில் சேர்ப்பித்துள்ளனர். (ஒ.4)

# இணையத்தளத்தின் உரிமையாளர் கைது



கொழும்பு,ஜூலை 10

15 வயதான சிறுமியை பாலியல் நடவடிக்கைகளுக்காக இணையத்தளத்தின் ஊடாக விற்பனை செய்யப்பட்ட விவகாரம் தொடர்பில், மற்றுமொருவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

15 வயதான சிறுமி விற்பனைக்கு உள்ளார் என்ற விளம்பரத்தை இணையத்தளத்தில் பதிவேற்றிய, இணையத்தளமொன்றின் உரிமையாளரே கைதுசெய்யப்பட்டுள்ளார்.

சிறுமி தொடர்பான விசாரணைகளின்போதே அந்த இணையத்தளத்தின் உரிமையாளர் தொடர்பிலும் தகவல்கள் கிடைத்துள்ளன என்று குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்தனர். (ஒ.4)

# கைதான 33 பேருக்கும் பிணை ஆனால் தனிமைப்படுதலில் வைப்பு

கொழும்பு,ஜூலை 10

கொத்தலாவல தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகச் சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து, ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்ட 33 பேரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

நாடாளுமன்றுக்குச் செல்லும் வழியில் பொல்துவ சுற்றுவட்டத்தில் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தால் ஏற்பாடுசெய்யப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் பிக்குகள், பெண்கள் உள்ளிட்டோர் பங்கேற்றிருந்தனர்.

எனினும் தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறினர் என்ற குற்றச்சாட்டுகளின் கீழ் அவர்களை பொலிஸார் அதிரடியாகக் கைதுசெய்தனர். இவர்களில் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலினும் அடங்குகின்றார்.

கைதுசெய்யப்பட்ட அனைவரும் நேற்றுமுன்தினம் மாலை 6 மணியளவில் பிணையில் விடுவிக்கப்பட்டனர். அதேவேளை 33 பேரையும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துமாறு நீதவான் உத்தரவிட்டுள்ளார். (ஒ.4)

# சி.பா.திணைக்களத்துக்கு புதிய தலைவர் நியமனம்

கொழும்பு,ஜூலை 10

சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் புதிய பணிப்பாளராக மேஜர் ஜெனரல் நெவில் ரஞ்சன் லமாஹேவகே நியமிக்கப்பட்டுள்ளார்.

மொரட்டுவ கட்டுபெத்தவிலுள்ள சிவில் பாதுகாப்புத் திணைக்கள தலைமையகத்தில் இவர் பதவியேற்றுக் கொண்டார். சிவில் பாதுகாப்புத் திணைக்களத்தின் 9 ஆவது பணிப்பாளர் இவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.4)

# நாடு முழுவதும் இன்றும் மழை



கொழும்பு,ஜூலை 10

நாடு முழுவதும் மழை மற்றும் காற்றுடன் கூடிய நிலைமை இன்றும் தொடரும் என்று வானிலை அவதான நிலையம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, வடமேல், தென் மற்றும் மத்திய மாகாணங்களில் அவ்வப்போது மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

மத்திய, சப்ரகமுவ மற்றும் மேல் மாகாணங்களிலும் காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மி.மீ க்கும் அதிகமான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடக்கு மாகாணத்தின் பல இடங்களில் மழை பெய்யும் என்றும் எதிர்பார்க்கப்படுகின்றது. (ஒ.4)



# பொலிஸார் மீது பழி சுமத்தாதீர்

## அமைச்சர் சரத்வீர சேகர ஆதங்கம்

கொழும்பு,ஜூலை 10

தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறி, ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுப்ப வர்கள், சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தால் வெளியிட்ட சுகாதார வழிகாட்டுதல்களை அடுத்தே கைதுசெய்யப்படுகின்றனர். எனவே பொலிஸார்மீது வீண்பழி சுமத்த வேண்டாம் என்று பொதுமக்களை பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சுகாதார விதிமுறைகளை மீறுபவர்கள் சட்டத்தின் முன் நிறுத்தப்படுவர் என்ற நிபந்தனைகளின் அடிப்படையில், கைதுகள் இடம்பெறுகின்றன. இதில் அரசியல் நோக்கங்கள் எவையுமில்லை.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் காலத்துக்குக் காலம் சுகாதார வழிகாட்டுதல்களை வெளியிட்டு வருகின்றார்.

சில நாள்களுக்கு முன்னர் புதிய வழிகாட்டுதல்களை வெளியிட்டார். அதில் ஆர்ப்பாட்டங்கள் தடை செய்யப்பட்டுள்ளது. இந்த உத்தரவுக்கு அமையவே கைதுகள் இடம்பெறுகின்றன. பொலிஸார்மீது எந்தக் குற்றமும் இல்லை - என்றார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# அதே காட்சி: அதே முடிவு

போரின் பின்னர் மிகத் தீவிரமாக முன்னெடுக்கப்பட்ட ராஜபக்ச குடும்பத்தின் ஆட்சி 2015ஆம் ஆண்டு மக்களால் தோற்கடிக்கப்பட்டு நாட்டிலிருந்து தூக்கி வீசப்பட்டமை அனைவரும் அறிந்ததே. தற்போதும் மீண்டும் அதே காட்சிகள் அதைவிட பன்மடங்கு வேகத்துடன் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஆகப்பெரும் நகர்வாகத்தான் நிதி அமைச்சராக பஸில் கொண்டுவரப்பட்டுள்ளமையைக் கொள்ள முடிகின்றது.


2010ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில், 'போர் வெற்றி' என்பதை அத்திபாரமாக வைத்து பொன்சேகாவைத் தோற்கடித்தார் மஹிந்த. அதன் பின்னர் மஹிந்தவின் குடும்பம் அரசின் முக்கிய அமைச்சுக்களை அலங்கரித்தது. ஊழல் பல்கிப் பெருகியது. இந்தக்கட்டற்ற குடும்ப ஆட்சியால் விரக்தியின் உச்சத்துக்குச் சென்ற மக்கள் 2015ஆம் ஆண்டு ஆட்சிக் கதிரையில் இருந்து மஹிந்தவை அகற்றிவிட்டு மைத்திரிபால சிறிசேனவை ஆட்சியில் அமர வைத்தனர்.

'போர் வெற்றி, பொருளாதார மாற்றம், வடக்கின் வசந்தம், ஆசியாவின் ஆச்சரியம், அபிவிருத்தி' என்று மஹிந்த பரப்புரை செய்த எந்தவொரு விடயங்களும் மக்கள் முன் எடுபடவில்லை. குடும்ப ஆட்சியை இந்தத் தீவில் இருந்து அப்புறப்படுத்த வேண்டும் என்பதில் மக்கள் தீர்மானமாக, தீவிரமாக நின்றனர். அதன் விளைவாகவே அந்த ஆட்சிமாற்றம். இன்னும் சொல்லப்போனால் மைத்திரி மேலுள்ள நம்பிக்கையால் அல்லாமல் மஹிந்தவின் ஆட்சியில் இருந்த விரக்தியால்தான் மேற்படி ஆட்சிமாற்றம் வித்திடப்பட்டது.

2019ஆம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கோத்தாபய வெற்றிபெற்றார். ஈஸ்டர் தாக்குதலின் பின்னர் இராணுவ சித்தாந்தங்களுடன்கூடிய தலைவர் ஒருவரின் தேவை நாட்டுக்கு மிகையாக அவசியப்பட்டதன் விளைவாக கோத்தாபய தெரிவு செய்யப்பட்டபோதிலும், மஹிந்தவின் காலத்தில் இடம்பெற்ற கசப்பான அனுபவங்கள் மீண்டும் நிகழாது என்பதாகவே மக்களின் நம்பிக்கையும் ஆரம்பத்தில் இருந்தது. ஆனால், 'அண்ணன் எவ்வழியோ தம்பியும் அதேவழி' என்பதாகத்தான் நகர்கின்றது கோத்தாபயவின் ஆட்சி.

பஸிலின் வருகையை அடுத்து ராஜபக்ச குடும்பத்தின் முக்கியஸ்தர்கள் அனைவரும் அரசுக்குள் இடம்பிடித்ததுடன் முக்கிய துறைகளையும் அலங்கரிக்கின்றனர். அதுமட்டுமல்ல மக்கள் போராட்டங்களையும், ஆர்ப்பாட்டங்களையும் மேற்கொள்வதற்கு அவர்களுக்கு இருந்த சுதந்திரம் பறிக்கப்பட்டுள்ளது. கொத்தலாவல பல்கலைக் கழகத்தின் உருவாக்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம் பொலிஸாரின் பலப் பிரயோகத்தால் அடக்கப்பட்டமை இதற்குச் சான்று. அத்துடன் இராணுவ தலையீடு நாட்டில் பல துறைகளிலும் (சுகாதாரத்துறை உட்பட) நடைமுறைப்படுத்தப்பட்டுள்ளது. ஒட்டுமொத்தத்தில் எந்த ஆட்சியை மக்கள் விரும்பாமல் 2015ஆம் ஆண்டு தூக்கி எறிந்தார்களோ அதே ஆட்சியைத்தான் மீண்டும் கோத்தாபயவும் நடைமுறைப்படுத்தியுள்ளார்.

இன்னொன்றையும் இங்கு நினைவில்கொள்ள வேண்டும். ஈஸ்டர் தாக்குதலை தன் தேர்தல் மூலதனமாகக் கொண்டு ஆட்சியமைத்த கோத்தாபய, குறைந்த பட்சம் அந்தத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கு நீதியைத் தேடிக்கொடுப்பதற்கே தவறிவிட்டார். ஒட்டுமொத்தத்தில் 2010ஆம் ஆண்டு முதல் 2015ஆம் ஆண்டுவரையில் நாட்டில் இடம்பெற்ற காட்சிகள்தான் தற்போது அரங்கேறிக் கொண்டிருக்கின்றன. அதே காட்சியாக இருந்தால் முடிவும் அதேபோன்று தானே இருக்க வேண்டும்.




## தனிமைப்படுத்தல் சட்டத்தினூடான
# கைதுகளுக்கு எதிராக உயர்நீதிமன்றில் வழக்கு

**கொழும்பு,ஜூலை 10**

**தனிமைப்படுத்தல் சட்டத்தின் அடிப்படையில் மக்களைக் கைதுசெய்கின்றமைக்கு எதிராக, ஐக்கிய மக்கள் சக்தியினரால், உயர்நீதிமன்றத்தில் மூன்று அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச் செயலாளர் ரஞ்சித் மத்தும பண்டார உள்ளிட்ட மூவர் இந்த அடிப்படை உரிமை மீறல் மனுக்களைத் தாக்கல் செய்துள்ளனர்.

கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்துவதற்காக சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் வெளியிட்டுள்ள விதிமுறைகளை பயன்படுத்தி, அமைதியாக ஆர்ப்பாட்டம் செய்வதற்கான உரிமைகள் ஒடுக்கப்படுகின்றன என்று ஐக்கிய மக்கள் சக்தி தனது மனுவில் குறிப்பிட்டுள்ளது.

ஆர்ப்பாட்டக்காரர்களை நியாயமற்ற முறையில் கைதுசெய்வது அரசமைப்பால் வழங்கப்பட்ட பேச்சு, கருத்து சுதந்திரத்துக்கான உரிமையை மீறும் செயல் என்று நீதிமன்றம் உத்தரவிட வேண்டும் என்றும் ஐக்கிய மக்கள் சக்தி வேண்டுகோள் விடுத்துள்ளது. (ஒ,4)

# அரசுக்கு எதிராக 45 அமைப்புக்கள்

## தனிமைப்படுத்தல் சட்டத்துக்கு எதிர்ப்பு

கொழும்பு,ஜூலை 10

தனிமைப்படுத்தல் சட்டத்தைப் பயன்படுத்தி, பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை அடக்க முயற்சிக்கும், தற்போதைய அரசின் செயற்பாடுகளுக்கு 45 சிவில் சமூக அமைப்புக்கள் இணைந்து எதிர்ப்பு வெளியிட்டுள்ளன.

அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புக்கள் உள்ளிட்ட அனைத்துத் தரப்பினரும், எவ்வித பேதங்களுமின்றி ஒன்றிணைய வேண்டும் என்றும் அமைப்புக்கள் வலியுறுத்தியுள்ளன..

45 சிவில் சமூக அமைப்புக்கள் ஒன்றிணைந்து வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கொரோனாத் தொற்றால் தனிமைப்படுத்தல் சட்டத்தைத் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்த வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இருப்பினும் அதனைப் பயன்படுத்தி பொதுமக்களின் கருத்துச் சுதந்திரத்தை அடக்கி, பொலிஸாரைப் பயன்படுத்தி முடக்குவதற்கு நடவடிக்கை எடுப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

உரிமைகளுக்காக ஆர்ப்பாட்டங்கள் மேற்கொண்டவர்கள், கைதுசெய்யப்பட்டதுடன், தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் இவ்வாறான அடக்குமுறைச் சம்பவங்கள் பதிவாகியுள்ளமை மிகவும் பாரதூரமான விடயமாகும்.

அரசை விமர்சிப்பதற்கான உரிமை நாட்டு மக்களுக்கு உண்டு என்ற விடயம் உயர்நீதிமன்றால் வழங்கப்பட்ட தீர்ப்புக்கள் பலவற்றின் ஊடாக உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

மஹிந்த ராஜபக்ச ஜனாதிபதியாகவும், கோத்தாபய ராஜபக்ச பாதுகாப்புச் செயலாளராகவும் பதவி வகித்த காலப்பகுதியில் மக்களின் விமர்சனங்களை அடக்குவதற்கென பாதுகாப்புப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின்போது சாதாரண பொதுமக்கள் உயிரிழந்த சந்தர்ப்பங்கள் பல உள்ளன.

எனவே தற்போதைய அரசால் அதிகரித்து வரும் ஜனநாயக விரோத செயற்பாடுகளைத் தோற்கடிப்பதற்கும், நாட்டு மக்களின் கருத்து வெளியிடுவதற்கான சுதந்திரம் மற்றும் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கும் பொதுமக்கள் அனைவரும் ஒன்றுபட வேண்டியது அவசியமாகும் - என்றுள்ளது. (ஒ,4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 13 . 08 . 1944



மறைவு 21 . 06 . 2020

நீர்வேலி கந்தசுவாமி கோவிலடி, சமூக சேவகி, சமூக பந்து, நீர்வைக்குரிசில், உயர்ந்த பெண்மணி

**அமரர் ருக்குமணி ஆனந்தவேல்**

(ஓய்வு நிலைக் கூட்டுறவுப் பரிசோதகர்)

*நல்லையா இராசாங்கம் நலமுடனே பெற்ற நங்கை!*
*ஆனந்தவேல் தன்னை நாயகனாய் அணைத்த மங்கை!*
*கூட்டுறவுத் துறைக்கே ஒளிவிளக்காய் அமைந்தாயம்மா!*
*நாட்டின் உயர்வுக்காய் நலம்பல செய்து நின்றாய்!*
*கந்தன் ஆலயம் கணிப்புற வழிநடத்தி நின்றாய் !*
*மாதர்க்கு மல்லிகையாய் மணம் பரப்பி நின்றாயம்மா!*
*மாதர் சங்கங்கள் மதிப் பொடு வளர்த்தாயம்மா!*
*நீர்வைக் கிராமம் நிறைவுறச் சேவை செய்தாயம்மா !*
*எல்லோர்க்கும் தேவியாய் ஏற்றமுற நின்றாயே!*
*உயர்பட்டங்கள் உன்னையே நாடி வந்தன!*
*பிரதமை திதியதனில் பிரிந்தாயே எம்மை விட்டு*
*மண்ணுலக வாழ்வை விட்டு விண்ணகம் சென்றிட்டாயே!*
*ஆண்டொன்று போனாலும் மறக்குமோ எங்கள் நெஞ்சம்.*
*ஆன்மா சாந்திக்காய் ஆண்டவனைத் துதிக்கின்றோம் அடைக சாந்தி!*

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

கந்தசுவாமி கோவிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

உங்கள் நினைவுகளுடன்
குடும்பத்தினர்

# மீளக்குடியமராத மக்கள் பதிவுகளை உறுதிப்படுத்துமாறு வேண்டுகோள்

**யாழ்ப்பாணம்,ஜூலை 10**

**உள்நாட்டுப் போர் காரணமாக யாழ்ப்பாணம் மாவட்டத்தில் இடம்பெயர்ந்த மக்களில், மீள்குடியமர்த்தப்படவுள்ள மக்களின் விபரங்களை இற்றைப்படுத்தும் நடவடிக்கைகள் பிரதேச செயலகங்களால் முன்னெடுக்கப்படவுள்ளன.**

இது தொடர்பில் மேலதிக மாவட்டச் செயலாளர் சு.முரளிதரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் போரால் இடம்பெயர்ந்து தற்போதும் வேறு இடங்களில் வசித்து வரும் குடும்பங்களின் விபரங்கள் மீளாய்வு செய்யப்படுகின்றன.

பல்வேறு பிரதேசங்கள் மீள்குடியமர்த்துவதற்கு அனுமதிக்கப்பட்ட நிலையில், மீள்குடியமராத குடும்பங்களின் விபரங்கள் அவர்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகங்களால் இற்றைப்படுத்தப்பட்டு வருகின்றன.

எனவே இடம்பெயர்ந்து இதுவரை மீள்குடியமராத மக்கள், தாங்கள் தற்போது வசிக்கும் பிரதேச செயலகத்துடன் தொடர்புகொண்டு, தங்களுடைய பெயர் குறிக்கப்பட்ட பட்டியல் உள்ளதா என்பதை உறுதிப்படுத்த வேண்டும் - என்றுள்ளது. (ஒ.4)

# முல்லையில் நகர சபை விரைவில் உருவாகும்

## காணிகளுக்கு உரிய ஆவணங்களை விரைந்து வழங்குமாறு தவிசாளர் வலியுறுத்து

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு மாவட்டத்தின் முல்லைபட்டினம், முல்லையூர் ஆகிய இரு வட்டாரங்களையும் இணைத்து முல்லைத்தீவு நகரசபை உருவாக்கப்படவுள்ளது என்று கரைதுறைப்பற்று பிரதேச சபைத் தவிசாளர் கமலநாதன் விஜிந்தன் தெரிவித்தார்.



இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

முல்லைத்தீவு மாவட்டத்தில் தற்போது கரைதுறைப்பற்று பிரதேச சபையின் வட்டாரங்களாக இருக்கின்ற முல்லைப் பட்டினம் மற்றும் முல்லையூர் ஆகிய இரு வட்டாரங்களையும் இணைத்து முல்லைத்தீவு நகரசபை உருவாக்கப்படவுள்ளது. கரைதுறைப்பற்று பிரதேச சபையினுடைய காலம் முடிவடைகின்ற போது, நகரசபையாக மாற்றுவதற்குரிய உத்தியோகபூர்வமான செயற்பாடுகள் இடம்பெறும். குறிப்பாக இந்த இரு வட்டாரங்களிலும் உள்ள பல காணிகள் தனியார் ஆவணங்கள் இன்னும் வழங்கப்படாது, காணிப் பிணக்குகள் தீர்க்கப்படாது காணப்படுகின்றது. இந்நிலையில் இந்த இரு வட்டாரங்களையும் இணைத்து நகரசபை உருவாக்கப்பட்ட பின்னர், காணி ஆவணங்கள் பெறப்படாத தனியார் காணிகள் அரச உடைமையாக்கும் நிலைமை ஏற்படும்.

எனவே இந்த முல்லைப்பட்டி னம் மற்றும், முல்லையூர் ஆகிய இரு வட்டாரங்களுக்குமுரிய உறுப்பினர்கள் இந்த விடயத்திலே கூடுதல் கவனம் எடுக்க வேண்டும்.

இந்த இரு வட்டாரங்களிலுமுள்ள மக்களுக்கு இதுதொடர்பில் தெளிவான விளங்கங்களை வழங்கி, பிரதேச செயலாளருடன் அணுகி காணிகளுக்குரிய ஆவணங்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டும் - என்றார். (ப-19)

# நிரந்தர வீடு இல்லாது மக்கள் பெரும் சிரமம்

## *அழகாபுரி கிராமத்தில் இந்த நிலை*

கிளிநொச்சி பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட புதுக்காடு அழகாபுரி கிராமத்தில் பல மக்கள் நிரந்தர வீடு, மற்றும் மலசலகூட வசதிகள் இன்றி அல்லல்படுகின்றனர் என்று சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.



நிரந்தர வீடு, மற்றும் மலசலகூட வசதிகள் இன்மையால், எமது பிள்ளைகளுடன் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றோம். மழை காலங்களில் காடுகளில் சென்றுகூட இயற்கைக் கடன் கழிக்க முடியாது அவலத்துக்கு உள்ளாகியுள்ளோம். இது தொடர்பாக கிராம அலுவலர், கிளிநொச்சி பிரதேச செயலகங்கள் மற்றும் அரசியல் பிரமுகர்கள் என பலரைச் சந்தித்தும் எமக்குப் பலன் கிடைக்கவில்லை.

சிறு பிள்ளைகளை வைத்துக்கொண்டு மழை காலங்களிலும் வெயில் காலங்களிலும் பெரும் சிரமப்படுகின்றோம். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நேரில் வந்து பார்த்து எமக்கு நிரந்தர வீட்டைப் பெற்றுத்தர முன்வரவேண்டும் என்றனர். (ப-113)

# முல்லையில் தொடர்கின்றது சட்டவிதோரமான காடழிப்பு

முல்லைத்தீவு, ஜூலை 10

முல்லைத்தீவு உடையார்கட்டு மூங்கிலாறு தெற்கு கிராமத்தில் சட்டவிரோத காடழிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என கிராம மக்கள் சுட்டிக்காட்டினர்.

குறித்த காடழிப்புத் தொடர்பில் கிராம அலுவலர் உட்பட அனைவரிடமும் முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டும் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படாமையால், தொடர்ந்தும் பலர் காடழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இது தொடர்பாக புதுக்குடியிருப்பு பிரதேச செயலகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (ப-19)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 'போட்டோ கொப்பி மிசின் பழுது'

## பட்டியல் ஒட்டுவதன் தாமதத்துக்கு அதிகாரிகள் கூறும் சில்லறைக் காரணம்



■ தி.ராஜ், சங்கேதன்

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் முன்னெடுக்கப்படவுள்ள வீட்டுத் திட்டம் தொடர்பாக மாவட்டச் செயலரின் சுற்றறிக்கையை பிரதேச மற்றும் கிராமிய மட்ட அதிகாரிகள் தூக்கிக்கடாசிவிட்டு தம் மிஷ்டப்படி செயற்படுவது உதயன் செய்தியாளர் குழுவின் இரண்டாம் நாள் களத்தரிசிப்பில் வெளிச்சத்துக்கு வந்துள்ளது. மாவட்டச் செயலரால் 06.07.2021ஆம் திகதி முதல் பிரதேச செயலகங்கள் மற்றும் கிராம சேவகர் அலுவலகங்கள், கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அலுவலகங்களில் பய்னாளி க்ள் பட்டியல் காட்சிப்படுத்தப்பட வேண்டும் என்று அறிவிக்கப்பட்டிருந்தது. இது தொடர்பில் கடந்த 6ஆம், 7ஆம் மற்றும் 8ஆம் திகதிகளில் நேரடியாகக் களத்தரிசிப்பு மேற்கொண்ட உதயன் செய்தியாளர் குழு உண்மை நிலையைக் கண்டறிந்தது.

**யாழ்ப்பாண பிரதேச செயலகம்**
**08.07.2021 காலை 10.03**


வீட்டுத்திட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்ட பயனாளிகள் பட்டியல் தெளிவாக அறிவித்தல் பலகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது. யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட கொழும்புத்துறை மேற்கு, கொழும்புத்துறை கிழக்கு கிராம அலுவலர் பிரிவு களிலும் பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.
வீட்டுத்திட்டம் தொடர்பில் சர்ச்சை கிளப்பியிருந்த தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட இடங்களில் எமது செய்தியாளர் குழு களத்தரிசிப்பை மேற்கொண்டது.

**நாவற்குழி கிழக்கு** (கிராம உத்தியோகத்தர் அலுவலகம்)
**08.07.2021 காலை 10.50**

பட்டியல் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. அங்கு கடமையிலிருந்த அலுவலர், வீட்டுத் திட்டம் தொடர்பில் எமக்குத் தெரியாது. எம்முடன் இது தொடர்பில் யாரும் உரையாடவும் இல்லை என்றார். சிறிது நேரத்தில் தொலைபேசியில் உரையாடி விட்டு, பட்டியல் பிரதேச செயலகத்தில் உள்ளது என்றும் எடுத்து வந்து அது ஒட்டப்படும் எனவும் தெரிவித்தார்.

**நாவற்குழி மேற்கு** (கிராம உத்தியோகத்தர் அலுவலகம்)
**08.07.2021 காலை 11.00**

கடமையிலிருந்த கிராம அலுவலர், வீட்டுத் திட்டப் பயனாளிகள் பட்டியல் எம்மிடம் உண்டு. ஆனால் கடந்த 3ஆம் திகதி மாவட்டச் செயலர் அறிவித்து, 6ஆம் திகதி காட்சிப்படுத்துமாறு கூறியமை தொடர்பில் தெரியாது.
நான் அபிவிருத்தி உத்தியோகத்தருடன் கதைத்துவிட்டுச் சொல்கிறேன்-என்றார். பின்னர் புதுப்பட்டியல் எடுப்பதற்கு அவர் பிரதேச செயலகம் செல்கின்றார். வந்த பின்னர் ஒட்டப்படும் என்று குறிப்பிட்டார்.





**கைதடி தென்கிழக்கு**
**08.07.2021 காலை 11.17**

கடமையிலிருந்த கிராம அலுவலர், பட்டியல் ஒட்டுவது தொடர்பில் எனக்குத் தெரியாது. பிரதேச செயலகத்துக்கு நேற்றும் சென்று வந்தேன். அப்படி ஒன்றும் சொல்லவில்லை. ஒரு மாதத்துக்கு முன்னர்தான் வீட்டுத் திட்ட பயனாளிகள் பட்டியல் காட்சிப்படுத்தினோம்- என்றார் பின்னர் தொலைபேசியில் தொடர்புகொண்டு கேட்டறிந்துவிட்டு, பிரதேச செயலகத்தில் புதிய பட்டியல் இருக்கின்றதாம். வந்து எடுக்குமாறு கூறுகின்றனர். அதை எடுத்து வந்து ஒட்டுவோம் என்று குறிப்பிட்டார்.

**கைதடி நுணாவில்**(கிராம உத்தியோகத்தர் அலுவலகம்)
**08.07.2021 காலை 11.33**

புதிய பட்டியல் ஒன்றும் இல்லை. முன்னர் ஒட்டிய பட்டடியல்தான் எம்மிடம் உண்டு என கடமையிலிருந்த அதிகாரிகள் பதிலளித்தனர்.

**சாவகச்சேரி பிரதேச செயலகம்**
**08.07.2021 காலை 11.50**

வீட்டுத்திட்டப் பட்டியல் எங்கே ஒட்டப்பட்டுள்ளது என்று வரவேற்புப் பகுதியிலிருந்தவர்களிடம் எமது செய்தியாளர் குழு வினவியது. அதற்கு கிராம அலுவலர் அலுவலகங்களில்தான் அது ஒட்டப்பட்டுள்ளது என்று உடனடியாகப் பதிலளித்தனர். அதன் பின்னர் எமது செய்தியாளர் குழு தம்மை ஊடகவியலாளர்கள் என்று அறிமுகப்படுத்தியதும், திட்டமிடல் கிளையில் கேளுங்கள் என்று வரவேற்புப் பகுதியிலிருந்தவர்களால் பதிலளிக்கப்பட்டது. திட்டமிடல் கிளையில் கேட்டபோது, இப்போதுதான் பட்டியல் தயாரித்து முடிந்தது. கீழே காத்திருங்கள். பட்டியல் ஒட்டப்படும் என்று பதிலளிக்கப்பட்டது.
இதன் பின்னர் வரவேற்புப் பகுதிக்கு வந்த எமது செய்தியாளர் குழு உங்களது அறிவித்தல் பலகை எங்கே உள்ளது என்று காட்டுங்கள் எனக் கேட்டது. அதனை ஒளிப்படம் எடுக்கவேண்டும். பிரதேச செயலரிடம் கேட்டுச் சொல்லுங்கள் என்று கூறியது.
இதன் போது அங்கு வந்த அலுவலர் ஒருவர், 'போட்டோ கொப்பி மிசின் பழுதாகிப்போட்டுது. கொஞ்ச நேரத்தில பட்டியல் ஒட்டுவினம்' என்று பதிலளித்தார். பின்னர் சில மணி நேரத்தில் பட்டியல் ஒட்டப்பட்டது.

**மருதங்கேணி பிரதேச செயலகம்**
**08.07.2021 மதியம் 1.03**

பிரதேச செயலகத்தில் பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது. 07.07.2021 அன்றுதான் ஒட்டப்பட்டுள்ளது. அதே போன்று பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட செம்பியன்பற்று தெற்கு, நாகர்கோவில் கிழக்கு, நாகர்கோவில் மேற்கு, அம்பன், குடத்தனை, பொற்பதி ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளிலும் பட்டியல் ஒட்டப்பட்டிருந்தது.
எல்லா இடங்களிலும் 07.07.2021 அன்றுதான் பட்டியல் ஒட்டப்பட்டுள்ளது. பிரதேச செயலகங்களில், கிராம அலுவலர் அலுவலகங்களில் எங்காவது பட்டியல் காட்சிப்படுத்தப்படாமல் இருந்தால் பொதுமக்கள் உதயனின் 077 120 9994 என்ற தொலைபேசி எண்ணுக்கு தொடர்பு கொண்டு தெரியப்படுத்த முடியும். உதயன் செய்தியாளர் குழு அதனை நேரடியாக ஆராய்ந்து வெளிப்படுத்தும். ■




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் யாழ்ப்பாண மாவட்டத்தில் வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்பட வுள்ளது. இதற்குரிய பய னாளிகள் பட்டியல் பிரதேச செயலர்களால் தெரிவுசெய்யப்பட்டு யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவர்களின் அனுமதிக்காக அனுப்பப்பட்டிருந்தது. அந்தப் பட்டியல் இங்கே வெளியிடப்படுகின்றது. இந்தப் பட்டியலில் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டு தகுதியில்லாதவர்கள் உள்ளடக்கப்பட்டிருப்பின் அது தொடர்பான ஆட்சேபனைகளை பிரதேச செயலகம் அல்லது மாவட்டச் செயலகத்துக்கு முன்வைக்க முடியும்.

*உதயனின் 077 120 9994 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தொடர்பு கொண்டும் இது தொடர்பான முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம். முறைப்பாடு களின் உண்மைத்தன்மையை உதயன் ஆராய்ந்து அதனை பிரசுரிப்பதுடன் சம்பந்தப்பட்ட உயர் அதி காரிகளிடமும் சேர்ப்பிப்பான்.*

## சாவகச்சேரி பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

திருநாவுக்கரசு தவசீலன் - (ஜே/288), அந்தோனிப்பிள்ளை ஜுடிஸ்தயாகுமார் - (ஜே/288), தனுஷ்கோடி விநாயகமூர்த்தி - (ஜே/288), பாலன் லக் ஷ்மி - (ஜே/288), சுந்தரம் நற்குணதேவன் - (ஜே/289), நற்குணதேவன் மங்கையக்கரசி - (ஜே/289), மயிலன் விநாசி - (ஜே/289), கணபதி சிவஞானம்- (ஜே/289), ராமசிங்கம் புவனேஸ்வரி - (ஜே/289), பரமன் தவராசா - (ஜே/289), கந்தன் குணபாலசிங்கம் - (ஜே/289), சின்னட்டி சண்முகரத்தினம் - (ஜே/289), கணபதிப்பிள்ளை செல்வநாதன் - (ஜே/291), சிவபாதம் சசிக்குமார் - (ஜே/292), மயில்வாகனம் அமுதலிங்கம் 292), நடராசா சுகந்தன் - (ஜே/293), அப்பாப்பிள்ளை தனபாலசிங்கம் - (ஜே/293), செல்லக்கண்டு ரதீபன் - (ஜே/293), அல்ராய் லூசியாஸ் மடினாஸ்- (ஜே/294), யோகன் ஜெயசீலன் - (ஜே/294), யோகநாதன் பாஸ்கரன் - (ஜே/294),

அன்ரநிக்ஸன் கென்சி மேரி - (ஜே/ 294), கிருஷ்ணராசா ராதிகா - (ஜே/294), நவட்ணம் ஜெனஸ்குமார் - (ஜே/295), கஜேந்திரராசா இந்திரராசா - (ஜே/295), நித்தியானந்தராசா நித்தியபவித்திரன் - (ஜே/295), ராமலிங்கம் துதியாவரன் - (ஜே/295), செல்லத்துரை ஜெகசீலன் - (ஜே/295), சச்சிதானந்தம் ருக்குமணிதேவி - (ஜே/295), அன்ரன்ராஜ் புதுமைமலர்- (ஜே/295), விஜேந்திரன் கௌரி - (ஜே/295), தேவராசா சுகந்தினி - (ஜே/295), மதியழகன் ரெஜினா - (ஜே/296), தங்கராசா சாந்தகுமாரி - (ஜே/296), பெரியசாமி செல்வராசா - (ஜே/297), அருமைத்துரை சன்ஜீவரூபன் - (ஜே/299), தம்பிராசா குலேந்திரராசா - (ஜே/300), ஜெயக்குமார் கீதா - (ஜே/302), முத்துவேலி அருளானந்தசிவம்- (ஜே/304), தம்பிப்பிப்பை தம்பிராசா - (ஜே/305), முருகேசு தியாகேஸ்வரன் - (ஜே/305), விநளராசன் நிரோஷா - (ஜே/305), குணநாயகம் கிருஷ்ணகுமாரி - (ஜே/306), ராசேந்திரம் செல்வராணி - (ஜே/306), பரமசிவம் பரமேந்திரன் - (ஜே/306), சிவசுப்பிரமணியம் உருத்திரா - (ஜே/306), கஜேந்திரன் கவிதா - (ஜே/306), சுதாகரன் கம்சனா - (ஜே/306), தங்கராசா வசந்தராணி - (ஜே/306), யோகராசா சதீஸ்கா- (ஜே/307), வைகுந்தவாசன் அகிலன் - (ஜே/308), ஐயாத்தரை சிவயோகநாதன்- (ஜே/308), கணபதிப்பிள்ளை தயாளன் - (ஜே/308), வெற்றிவேல் சந்திரகுமார் - (ஜே/308), வடிவேலு சதீஸ்கரன் - (ஜே/308), கனகசுந்தரம் கிருபாளினி - (ஜே/308), தியாகராஜ் கஜமோகன் - (ஜே/ 308), அப்பாக்குட்டி ஞானேந்திரன் - (ஜே/308), தங்கராசா சுயந்திரன் - (ஜே/308), ஜோண்பின்னை சுரேஸ்குமார் - (ஜே/308), ஐயாத்துரை பகீரதன் - (ஜே/308), தம்பு நாகராசா - (ஜே/308), மகாலிங்கம் பவளம் - (ஜே/309), குணரத்தினம் சத்தியரமேஷ் - (ஜே/310), பாலசுப்பிரமணியம் சுதாகரன் - (ஜே/310), ரவீந்திரபிரகாஷ் திலகேஸ்வரி- (ஜே/310), செல்வகுமாரன் தவரஞ்சினி - (ஜே/312), கிருஷ்ணன் பகீரா - (ஜே/312), தம்பிப்பிள்ளை பாலசிங்கம் - (ஜே/313), அருளம்பலம் தனரூபன் - (ஜே/313), உத்தமகுரு உதயகுமார் - (ஜே/313), யோகராஜ் சுகந்தினி - (ஜே/313), மகாலிங்கம் யோகம்மா - (ஜே/314), கிட்ணன் செல்வநாயகம் - (ஜே/314), மகாலிங்கம் மணிவர்ணன் - (ஜே/314), கந்தன் தர்மகுலசிங்கம் - (ஜே/314), சிவகொழுந்து ரத்தினம் - (ஜே/315), குமாரவேலு உதயகுமார் - (ஜே/315), ரத்தினம் சசிகரன் - (ஜே/315), சின்னம்பு பார்த்தீபன் - (ஜே/315),

கந்தசாமி வசீகரன் - (ஜே/315), அழகேந்திரன் சந்திரகாந்தன் - (ஜே/316), சின்னத்துரை சத்தியசீலன் - (ஜே/316), செல்வரத்தினம் செந்தில்குமாரன் - (ஜே/316), கிருஷ்ணகுமார் கமலராணி - (ஜே/316), சின்னத்தம்பி விக்கினேஸ்வரன் - (ஜே/316), சொர்க்கநாதன் பரமேஸ்வரி - (ஜே/316), சின்னய்யா பொன்னுச்சாமி - (ஜே/316), நடராசா விசயரூபன் - (ஜே/316), ரங்கநாதன் உதயகல்யாணி - (ஜே/317), நந்தீஸ்வரன் தசினி- (ஜே/317), தர்மராசா முகுந்தன் - (ஜே/318), சண்முகராசா தயாபரன் - (ஜே/318), ராசதுரை ரஜீபன் - (ஜே/319), நடராசா நிபிலன் - (ஜே/319), சோமசுந்தரனம் ராசரட்ணம் - (ஜே/319), முருகையா விக்னேஸ்வரன் - (ஜே/319), மயில்வாகனம் மோகன்ராஜ் - (ஜே/319), ரட்ணம் சுதாகரன் - (ஜே/319), உதயன் தனுஷா- (ஜே/319), சிவராசா நளினி - (ஜே/319), தில்லையம்பலம் யோகேஸ்வரன் - (ஜே/319), தில்லையம்பலம் யோகேஸ்வரன் - (ஜே/319), கந்தையன் ராசலிங்கம் - (ஜே/319), அல்பிரட் அன்ரன்ரொனீஸ் - (ஜே/319), ராசரட்ணம் வியாயலட்சுமி - (ஜே/320), சின்னதம்பி சந்திரயோகலிங்கம் - (ஜே/322), கஜேந்திரன் கோகிலேஸ்வரி - (ஜே/322),

முத்துக்குமாரு அருளானந்தம் - (ஜே/324), வல்லிபுரம் செல்வரட்ணம் - (ஜே/325), தர்மலிங்கம் கமலதாஸ் - (ஜே/325), வைத்திலிங்கம் லட்சுமி - (ஜே/326), கணபதிப்பிள்ளை வேலுப்பிள்ளை - (ஜே/326), தில்லைநாயகம் திணேஷ் - (ஜே/326), துரைசிங்கம் ஜேசுதாசன் - (ஜே/326), பாக்கி[illegible] ராஜ் - (ஜே/326), ராசலிங்கம் புஸ்பமலர் - (ஜே/327), மகே[illegible] - (ஜே/327), கந்தசாமி ராசகுமார் - (ஜே/327), செல்லத்துரை ரமேஷ் - (ஜே/327),

அந்தோனிப்பிள்ளை ஜெனோல்மற்றீஸ் - (ஜே/327), மகாலிங்கம் இன்பராசா - (ஜே/327) அல்லிமுத்து செல்வராணி - (ஜே/327), குஜிரன் ரெஜினோல்ட் சரோஜா - (ஜே/327), நாகலிங்கம் தீபாஜினி - (ஜே/327), சந்திரகுமார் வேல்மலர் - (ஜே/327), யூலியட் செல்வராணி - (ஜே/327), சரவணமுத்து கோகுலராதா - (ஜே/332), கணபதிப்பிள்ளை செல்வேந்திரம் - (ஜே/332), சின்னத்துரை மனோகரன் - (ஜே/332), ஆறுமுகம் நடராசா - (ஜே/332), கந்தசாமி கமலதாசன் - (ஜே/332), குகன் சந்திரகலா - (ஜே/335), விநாயகமூர்த்தி ராஜேஸ்வரி - (ஜே/336), பிரான்சிஸ் செவியர் அன்ரன் இளங்கோ - (ஜே/336), வேலாயுதம் நகுலேஸ்வரன் - (ஜே/336), கோபால் ராமேஸ்வரன் - (ஜே/339),

பன்னீர்செல்வம் நிரஞ்சகுமார்- (ஜே/341), சிதம்பரநாதர் நிரகரன் - (ஜே/341), கந்தையா சிவரூபன் - (ஜே/342), சின்னத்தம்பி தவகுலசிங்கம் - (ஜே/342), பொன்னன் ராமேஸ்வரன் - (ஜே/342), நடேசு உதயகுமார் - (ஜே/342), புஸ்பகுமார் கவிதா - (ஜே/342), கனகசிங்கம் சசிக்குமார் - (ஜே/342), ராமு யோகரத்தினம் - (ஜே/ 343), தம்பித்துரை நந்தகுமார் - (ஜே/343), ஆறுமுகம் சிதம்பரநாதன் - (ஜே/343), கபிரிஜேற்பிள்ளை ஜெகதீஸ்வரன் - (ஜே/343), திவாகரன் ஜெயந்தினி - (ஜே/343), பிரதீபன் செல்வராசினி - (ஜே/343), ராஜேஸ்கண்ணா வாசுகி- (ஜே/344), வீரகத்தி குலசேகரன் - (ஜே/344), சின்னத்துரை உலகேந்திரராசா - (ஜே/344), செல்லத்துரை நாகராசா - (ஜே/344), குலேந்திரன் குமுதேவி - (ஜே/344), நந்தகுமார் ஜெயராணி - (ஜே/344),

### ஆறு லட்சம் ரூபா வீடு

கந்தசாமி நாகேஸ்வரி- (ஜே/308), கணேஜ சரஸ்வதி - (ஜே/324), ஜோசப் தாரணி - (ஜே/294), பஞ்சலிங்கம் கிருஷ்ணகுமாரி - (ஜே/305), லோகநாதன் சாவித்திரி - (ஜே/316), கந்தசாமி யோகநாயகி - (ஜே/347), நீதிராசா நிரஞ்சினி - (ஜே/289), சிவநாதன் செல்வமலர் - (ஜே/ 295), பொன்னையா தனலக்சுமி - (ஜே/300), கார்த்தீபன் சுஜிதா - (ஜே/315), கே.ராசேந்திரம் - (ஜே/319), அந்தோனிமுத்து ராசம்மா - (ஜே/319), வல்லிபுரம் ராசகுமாரி - (ஜே/325), சந்திரதாஸ் மனோன்மணி - (ஜே/ 327), சுப்பிரமணியம் சாந்தி - (ஜே/290), வைரவன் தம்பிராசா - (ஜே/293), ராசதுரை செல்லம்மா - (ஜே/295), நாகமுத்து சிவமணி - (ஜே/296), செல்லத்தம்பி லீலாவதி - (ஜே/301), ஜெயலிங்கம் பவளம் - (ஜே/ 301), கந்தசாமி தட்சாகினி - (ஜே/302), வைத்திலிங்கம் சோமசுந்தரம் - (ஜே/ 303), பேரின்பநாயகம் செல்வராணி - (ஜே/307), வெள்ளையன் ருக்குமணி - (ஜே/310), ராமநாதன் சந்திரவதனா - (ஜே/315), ராசதுரை புஸ்பவதி - (ஜே/316) , செல்வலிங்கராசா தவமணிதேவி - (ஜே/ 316), திருநம்புக்கரசு வல்லிப்பிள்ளை - (ஜே/320), சிவயோகராசா சரஸ்வதி - (ஜே/324), நடேசன் யோகம்மா - (ஜே/327), அல்வன் செல்லாச்சி - (ஜே/335),

பரம் லட்சுமி - (ஜே/337), நமசிவாயம் செல்வநாயகி - (ஜே/339) , நயினன்சுந்தரம் வல்லியம்மா - (ஜே/341), பாலச்சந்திரன் சிவபாக்கியம் - (ஜே/343), குமாரு ராசாம்மா - (ஜே/345), செல்லத்துரை சிவயோகம் - (ஜே/345), விஜேந்திரன் சாமிலா - (ஜே/288), ஜீவநேசன் சசிகலா - (ஜே/289), ராஜேஸ்வரன் புவனேஸ்வரி - (ஜே/293), சதீஸ்வரன் மேரி கலிசியா - (ஜே/294), நிஷாந்தன் மேரி சரண்யா - (ஜே/ 294), சுதாசரன் வக்சலா - (ஜே/295), அன்னலிங்கம் குலராணி - (ஜே/ 305), விக்னேஸ்வரன் ரஞ்சிதராணி - (ஜே/305), அரவிந்தன் சுரேந்தினி - (ஜே/305), தனபாலசிங்கம் கலாமதி - (ஜே/312), வேலன் பரராசசிங்கம் - (ஜே/314), இளங்கோவன் விமலேஸ்வரி - (ஜே/314), சுப்பிரமணியம் சரஸ்வதி - (ஜே/314), ராமச்சந்திரன் ஈஸ்வரி - (ஜே/316), பாலகிருஷ்ணர் கலாதேவி 316), மனோகரன் யோகநாயகி - (ஜே/ 317), சிறீஸ்கந்தமூர்த்தி சுலோஜனா - (ஜே/ 318), அருளாந்தம் பத்மாதேவி - (ஜே/318),

துரை சந்திரகுமார் - (ஜே/319), தேவராசா தயாபதி - (ஜே/320), குணம் பிறேமாவதி - (ஜே/324), சத்தியானந்தராசா சத்தியபாமா- (ஜே/324), பாலசிங்கம் சரஸ்வதி - (ஜே/327), கிட்டினன் ராசேஸ்வரன் - (ஜே/327), தெய்வேந்திரம் வசந்தமலர் - (ஜே/327), தங்கராசா சரஸ்வதி - (ஜே/327), பூவைசிங்கம் தனலட்சுமி - (ஜே/327), ராசதுரை பொன்னம்மா - (ஜே/328), கனகலிங்கம் புஸ்பாவதி - (ஜே/333), வீரசிங்கம் சிவக்கொழுந்து - (ஜே/334), பாஸ்கரன் புவனேஸ்வரி - (ஜே/337), ரமணன் மானிகா - (ஜே/342), ராமன் கந்தையா - (ஜே/343), ஜோன் செல்வராசா இந்திராணி - (ஜே/ 345), கௌரியர் திலகவதி - (ஜே/345), வல்லிபுரம் தவமணி - (ஜே/437), சிவசுப்பிரமணியம் மயூரன் - (ஜே/313), தம்பு வைகுந்தராசா - (ஜே/314), சின்னக்குட்டி செல்வரட்ணம் - (ஜே/340), சின்னப்பு கிருஷ்ணபிள்ளை - (ஜே/343), ம[illegible]தன் தர்சினி - (ஜே/ 298), சதாசிவம் செல்வராசா - (ஜே/314), [illegible] ஜெயதாஸ் - (ஜே/314), ராசேந்திரம் தியாகராசா - (ஜே/322), நவரட்னராஜா நந்தகுமார் - (ஜே/337).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீட்டுத்திட்ட பயனாளிகள் விவரம்

## கோப்பாய் பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

ஜோதிவர்மன் உரித்திராதேவி (ஜே-260), காந்தசாமி ஜெயலக் ஷ்மி ( ஜே -270), ஆரன் சின்னராசா (ஜே-282), கணபதி செல்வரசன் (ஜே- 275), சீதாம்பரபிள்ளை திவேந்திரன் (ஜே- 275), ரத்தினசிங்கம் கண்மணி (ஜே-275), செல்லத்துரை பாலசுப்பிரமணியம் (ஜே- 268), சீனியன் குவேந்திரன் (ஜே- 269), சுடலையண்டி மகாலிங்கம் (ஜே-260)

நாகராசா ரஜினி (ஜே-262), ஸ்ரீகாந்தன் ஷோபா (ஜே-265), வில்சன் தமிழ்செல்வி (ஜே- 265), சீவரத்தினம் மதுரானாயகி (ஜே- 266), யோவேல் உதயசேன (ஜே-266) விஜயகாந்தன் வசந்தினி (ஜே- 266), விநாயகமூர்த்தி கவிதா (ஜே-267),சின்னதம்பி ஜெகதீவரன் (ஜே- 267), நன்னியன் கிருஷ்ணபிள்ளை (ஜே-267), ராசையா குணராசா (ஜே- 269),பரமநாதன் சித்திரா (ஜே-269),கணபதிபிள்ளை வள்ளியம்மை (ஜே- 270) ராசதுரை செல்வகுமார் (ஜே-272),துரைசிங்கம் தர்மசீலன் (ஜே-273), கதிரைமலை செல்வகுமார் (ஜே-273), ராசன் ரமேஷ் (ஜே-274), கணேசலிங்கம் சாஹிலா (ஜே-274) யோகேஸ்வரன் சுதர்சன் (ஜே-285), பிறேமதாஸ் உமாரதி (ஜே-286), காண்டியா நிமல்ராஜ் (ஜே-286),நவரட்ணம் ரமேஸ்வரன் (ஜே- 286),விஜயன் கபிலன் (ஜே-287) பேரின்பராசா ஷர்மிலாதேவி (ஜே- 287),தவச்செல்வன் ராஜனகுமாரி (ஜே-287), ஸ்ரீகாந்தன் பத்மினி (ஜே- 261), சடையன் தெய்வேந்திரன் (ஜே-275), குணரட்ணம் ரத்தீபன் (ஜே-275), சின்னப்போடியன் சிவனேஸ்வரன் (ஜே-271).அரியகுட்டி காண்டீபன் (ஜே-263),39 சிவகொழுந்து ஞானகுமார் (ஜே- 269),40 வீரசிங்கம் தவராசா (ஜே-269), தம்பித்துரை சந்திரகுமார்7(ஜே- 280), குமாரசுவாமி சந்திரகுமார் (ஜே-280), நடராசா தெய்வராணி (ஜே- 286),சுதாகரன் வசந்தகுமாரி (ஜே- 258), சீலன் சந்திரன் (ஜே- 258),சிறி சுகந்தினி (ஜே- 262),கந்தசாமி செல்வராணி (ஜே-267),யோகராசா தவராணி (ஜே-276), ஜெகநாதம் சசிகலா (ஜே-286), பரமேஸ்வரன் சியாமினி (ஜே-261)

கண்ணன் தங்கேஸ்வரி (ஜே- 271), இராமையா ராசன் (ஜே-271), வைரவன் மகாலிங்கம் (ஜே-273), வீரன் நல்லதம்பி (ஜே-263),செல்லார் கிருஷ்ணபிள்ளை (ஜே- 264),செல்லத்துரை தெய்வாராசா (ஜே- 269),சின்னராசா துரைராசா (ஜே-282), கிருஷ்ணன் சந்திரசேகரம் (ஜே-285), குட்டி அமிர்தலிங்கம் (ஜே-285),சீனியன் தர்மசேகரம் (ஜே-286),வைரவன் குணராசா (ஜே- 286), இளையதம்பி ஜெயரத்னம் (ஜே- 286), சீலன் கந்தசாமி (ஜே-271),சின்னடி அரியதாஸ் (ஜே- 277), மனோகரன் புஸ்பராசா (ஜே- 277), சுப்பிரமணியம் நந்தகுமார் (ஜே-260),நாகமுத்து செல்வம் (ஜே-263), தேவராசா ஜெயராசா (ஜே- 267), நெல்லியன் விஜயரட்ணம் (ஜே-272), ராசையா சிவானந்தம் (ஜே-272),நன்னியன் சிங்கராஜா (ஜே- 274), காந்தையா ரசரத்தினம் (ஜே-282), முருகுப்பிள்ளை முகுந்தவராசா (ஜே-282), குணசிங்கம் பிரியா (ஜே- 263), ரத்னம் ரவிக்குமார் (ஜே-258), பாஸ்கரன் கஜந்தன் (ஜே-258), ராசையா வரதகுமார் (ஜே- 258), சுப்பிரமணியம் மத்தியழகன் (ஜே-261), தீவேந்திரம் ஆனந்தராசா (ஜே- 261), சபரத்தினம் முருகையா (ஜே-262), பாலசுந்தரம் குலேந்திரலிங்கம்(ஜே- 263),பொன்னன் தில்லைநாதன் (ஜே-264),பெரியதம்பி வரதராசா (ஜே- 265), அருணன் விஜயகுமார் (ஜே-265), நேசமுத்து தேவராசா (ஜே-265), செல்லத்துரை தானேஸ்வரன் (ஜே- 266), சின்னையா ஜெயராஜ் ராகு (ஜே-266), சிவ்ரமலிங்கம் நிசாந்தன் (ஜே-267), வீரசிங்கம் விஜயாதாஸ் (ஜே- 267), வைரமுத்து இருதயகுமார் (ஜே-267), மாணிக்கம் சிவகுரு (ஜே-269), பூதம்பி முருகநாதன் (ஜே-269), தவராசா சசிக்குமார் (ஜே-270), தியகராசா பாக்கியராசா (ஜே- 270), சுப்பையா ரத்தினசிங்கம் (ஜே-272), ரட்ணம் தனரூபன் (ஜே- 272), ரட்ணம் விமலாசூரியார் (ஜே- 272), பாஸ்கரன் விஜயகுமாரி (ஜே- 273, ரசரத்தினம் விஜி (ஜே-274), நவரத்தினம் உதயதாஸ் (ஜே- 276),பிரம்சிவன் செந்துரான் (ஜே-279), முத்தன் விஜயரத்தினமூர்த்தி (ஜே-282)

சின்னார் கதிர்கமநாதன் (ஜே-285), சண்முகநாதன் சபநாதன் (ஜே- 275), மார்க்கண்டு ஸ்ரீதரன் (ஜே-275), கணபதி காந்தசாமி (ஜே- 277), தினேஷ் ஜனதா (ஜே- 277), ராமராஜ் லோகநாதன் (ஜே-277),தேவராசா ரவிச்சந்திரன் (ஜே- 266), முருகையா தர்மராசா (ஜே-274),மார்க்கண்டு கிருஷ்ணராஜ் (ஜே-274),சுப்பிரமணியம் பாஸ்கரன் (ஜே- 274), செல்லத்துரை வசீகரன் (ஜே-274) ,திருச்செல்வம் விபுலானந்தன் (ஜே-275), கிருஷ்ணபிள்ளை ஜெயகிரி (ஜே- 279), தம்பையா மனோகரன் (ஜே-281), தேவராசா ராசசேன (ஜே-266), காந்தையா ஞானசுதன் (ஜே-257), பூவிலிங்கம் தயாபரன் (ஜே- 258),குண்டுமணி ஜெயச்சந்திரன் (ஜே-258),குமரவேலு நவரத்தினகுமார் (ஜே- 261), மஹிந்தன் நிஷா (ஜே- 266), தனுஸ்கோடி மகேந்திரன் தர்ஷினி(ஜே- 266), ரோஜந்தன் ஜெயலக்ஸ்மி (ஜே- 266), நித்தியானந்தன் ஸ்ரீதேவி (ஜே- 269), செல்வன் சதீஸ்கரன் (ஜே- 272),சீலன் தேவன் (ஜே- 272), காந்தையா ஜெகதீசலிங்கம்(ஜே- 275), சின்னராசா சிவசீலன் (ஜே-275),அமுதலிங்கம் தவனேசன் (ஜே- 276),சின்னத்தம்பி தபேந்திரன் (ஜே- 276), பொன்னையா தவராசா (ஜே- 258)

குமாரகுலசிங்கம் குகன் (ஜே- 261), பேதுருப்பிள்ளை ஆனந்தராசா (ஜே- 266), தேவராசா தேவகுமார் (ஜே- 266), புலேந்திரன் பன்ஷநாதன் (ஜே- 266),வைரமுத்து தங்கராசா (ஜே- 267), தவராசா அஜந்தன் (ஜே- 267),தங்கராசா சுதிகாந்தராசா (ஜே- 267), முருகன் கைலயன்கிரிநாதன் (ஜே- 267), பஞ்சநாதன் கஜேந்திரன் (ஜே- 267),மஹாலிங்கம் ஜெகன் (ஜே- 267),1சந்திரகுமார் செல்வகுமார் (ஜே-267),சின்னராசா பகீரதன் (ஜே- 269), அப்புத்துரை பகீரதன் (ஜே- 272), அருளம்பலம் அருட்செல்வி (ஜே- 277),மார்க்கண்டு கமலநாதன் (ஜே-277),விஜியகாந்தன் துர்கேஸ்வரன் (ஜே- 279), நாகமணி சசிகுமார் (ஜே- 279), விவேகரஞ்சன் கமலேஸ்வரி (ஜே- 280), ரத்னராசா ராசிதரன் (ஜே- 280), சிவபிரகாசம் பத்மரூபன் (ஜே- 280), திருநாவுகரசு திருக்குமரதாசன் (ஜே- 280), சுந்தரவேல் கோபாலகிருஷ்ணன் (ஜே- 280), திருமேணி சத்தியமூர்த்தி (ஜே- 281), கிட்டனர் பிள்ளைநாயகம் (ஜே- 286), நடேசு விநாயகமூர்த்தி (ஜே- 271), சதீஸ் விஜிதா (ஜே-267), பிரேமதர்ஷன் சுமித்ரா (ஜே- 267), ஜெயராசா இவரணி (ஜே- 284),ஞானரூபன் பாத்திமரணி (ஜே- 261), ரமேஷ் ஜஸ்மின் பிரியதர்ஷினி (ஜே- 258), பிரதாப் சசிபனா (ஜே- 258) .

### ஆறு லட்சம் ரூபா வீடு

கணபதிப்பிள்ளை சரஸ்வதி (ஜே/261), தில்லையம்பலம் பூபவதி (ஜே/261),இரத்தினம் தவமணி (ஜே/275),மணிக்கம் மலர் (ஜே/273), இராசையா மன்மதராசன் (ஜே/258), பாலசிங்கம் சறோஜா (ஜே/269), சிவபாதம் இந்திராதேவி (ஜே/282), நித்தியானந்தன் இராஜேஸ்வரி (ஜே/262), ஐயம்பிள்ளை இராசாதுரை (ஜே/263), இராசேந்திரம் விக்டர் டானியேல் (ஜே/266), வைத்திஸ்வர் சரஸ்வதி (ஜே/268), சண்முகநாதன் ராசத்தியம்மாள் (ஜே/268), தியாகன் சின்னம்மா (ஜே/273), செல்வராஜா பரமேஸ்வரி (ஜே/273)

சிவலிங்கம் மகாலக் ஷ்மி (ஜே/275), துரைசிங்கம் ராஜலக் ஷ்மி (ஜே/275), சிவபாலசுந்தரம் இராஜேஸ்வரி (ஜே/276), அம்பிகாவதி பரமேஸ்வரி (ஜே/283)

சிவலிங்கம் பூரணம் (ஜே/283), தம்பையா ருக்குமணி (ஜே/283), ஆறுமுகசாமி மனோரஞ்சிதம் (ஜே/286), ஆரியமுத்து இராசாமணி (ஜே/267), செல்வம் கதிராசி (ஜே/273), யோகேஸ்வரன் வசந்தா (ஜே/257), தேவராசா செல்லம்மா (ஜே/258), அருளானந்தம் இந்திராணி (ஜே/263), நாகராசா இரத்தினம் (ஜே/265), தவராசா செல்வநாயகி (ஜே/272), கனகமூர்த்தி ராந்தினேஸ்வரி (ஜே/272), இராமநாதன் சடசாமூர்த்தி (ஜே/272), சுப்பிரமணியம் பரமேஸ்வரி (ஜே/273), கந்தமூர்த்தி மகாதேவி (ஜே/273), குட்டித்தம்பி சுசீலாதேவி (ஜே/275)

செந்திஸ்வரன் கௌரி (ஜே/275), கனகன் ஐயாத்துரை (ஜே/279), விஜயகாந்தன் கஞ்சனா (ஜே/279), குணசிங்கம் வைகுந்தராசா (ஜே/286), அருள்ராஜ் வசந்தினி (ஜே/261), மகேந்திரம் யசோதா (ஜே/261), விக்னேஸ்வரன் ரஞ்சனி (ஜே/258), மகேந்திரம் வசந்தா (ஜே/273), இளையவன் மகாலிங்கம் (ஜே/273)

மகேந்திரம் மாலா (ஜே/273), சந்திரன் பர்பதம் (ஜே/273), தனபாலசிங்கம் மைனாபதி (ஜே/273), தியாகன் சின்னம்மா (ஜே/273), தியாகராசா விஜயலக் ஷ்மி (ஜே/285), மகேந்திரம் பொன்மலர் (ஜே/273), வேலன் யமுனா (ஜே/277) வல்லிபுரம் தம்பிராசா (ஜே/287), சுப்பிரமணியம் இன்பராணி (ஜே/269), தில்லை அப்புத்துரை (ஜே/264), மரியதாஸ் விசுவாசம் (ஜே/266), பிலேந்திரன் தவஞானம் (ஜே/266), மாணிக்கம் சின்னராசா (ஜே/267), ஆறுமுகம் அருளானந்தம் (ஜே/270), சிவாலை சண்முலம் (ஜே/273), கருப்பாசி சின்னத்தம்பி (ஜே/283), மாணிக்கம் சுகதாசான் (ஜே/286), சின்னவன் தங்கராசா (ஜே/272), இராசேந்திரம் பீற்றார் (ஜே/261), சுரேஸ் லாதா (ஜே/267) கருணைராசா சரஸ்வதி (ஜே/267), கதிர்காமநாதன் கவுஸ்சலா (ஜே/277), கணவதிப்பிள்ளை மகேந்திரம் (ஜே/259), வைரமுத்து யேசுதான் (ஜே/266), தவராசா மகாதேவா (ஜே/266), சிவசாமி கணேசலிங்கம் (ஜே/268)

## மருதங்கேணி பிரதேச செயலகம்

### பத்து லட்சம் ரூபா வீடு

சிதம்பரப்பிள்ளை தங்கராசா J/424, இராசகுலசிங்கம் கஜந்தா J/423, பெர்ணாந்து விஜயலக்சுமி J/423, இமானுவேல் யேசுநாயகம் J/424, விஜயரத்தினம் கேதீஸ்வரன் J/423, விஜயகாந்தன் விக்னேஸ்வரன J/423, இராசேந்திரம் சுரெஸ்குமரர் J/424, ஜெயரஞ்சன் ஜெயமாலினி J/424, தினேஸ் சர்மிலா J/423, பூலோகசிங்கம் கேதீஸ்வரன் J/423, சுப்பையா வைத்தீஸ்வரன் J/423, தாமலிங்கம் சரவணபவன் J/423, விஸ்ணுகுமரர் கேதீஸ்வரன் J/423, யோகலிங்கம் நிர்மலாதேவி J/423, கனகசபை சற்குணலிங்கம் J/419, கருணாநிதி சசிகலா J/430, தேவராசா ஜொலின்றோஸ் J/433, எஸ். டெனிசன் லதீஸ்கரன் J/428, செல்லத்துரை சிறிஸ்காந்த ராசா J/433, சுரியகாந்தன் துர்க்கா J/425, கணபதிப்பிள்ளை தருமராசா J/430, சங்கரப்பிள்ளை அமிர்தலிங்கம் J/430, இராமலிங்கம் ஜெயச்சந்திரன் J/430, தம்பையா அசோக்குமரர் J/427, நாகேந்திரம் றுதீபன் J/430, தேவராசா டினோஸ் J/430, சத்தியகீர்த்தி அனோஜன் J/430, தர்மகுலசிங்கம் [illegible] J/430, [illegible] நிசாந்தன் J/418, ஜேசுராசா இரவிக்குமரர் J420, [illegible], இரத்தினசாமி சாந்தரூபன் J/429, சந்திரபிரகாசம் சுமித்திலீபன் J/429, சிவனொளி மகிம்சன் J/427, மாணிக்கம் பிரபாகரன் J/427, யோகராசா றொசாந்தன் J/433, யேசுராசா ஜெனோசன் J/433, மரியநாயகம் ரஜீவன் J/433, செல்லத்துரை சிவஞானராசா J/433, வின்சன் பெனடிற் றெஜினோல்ட் றெனிஸ் J/433, கிருஸ்ணராசா விஜிதன் J/431

### ஆறு லட்சம் ரூபா வீடு

சற்குணலிங்கம் நாகேஸ்வரி J/432, யேசுமனோகரசீலன் செல்லகண்மணி J/428, சிவஞானசுந்தரம் கன்னிகாபரமேஸ்வரி J/429, நடராசா சின்னபிள்ளை J/432, நித்தியானனந்தம் சீவரத்தினம் j/419, மயாளன் சத்தியலீலா J/430, சந்திரலிங்கம் மகேஸ்வரி J/423, அருமைத்துரை கமலாதேவி J/424, சுப்பன் தேவராசா J/434, செல்லத்தம்பி இராசலட்சுமி J/430, தேவசிகாமணி நாகேஸ்வரி J/430, அமரசுந்தரம் தங்கலட்சுமி J/429, கிருஸ்ணபிள்ளை புஸ்பமலர் J/429, இராசையா தேவராசபிள்ளை J/428, பாலசுந்தரம் புவனேஸ்வரி J/429, கந்தசாமி நாகேஸ்வரி J/423, செல்லத்துரை நாகமுத்து J/429, இரட்ணசிங்கம் சந்திராவதி J/429, [illegible]ரன் மகாதேவி J/422, முருகேசு லலிலாதேவி J/422, ஆபிரகாம் தொலன்தினோ நிகொலஸ் J/418

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முல்லையில் 4 நாள்களில் 2008 பேருக்குத் தடுப்பூசி



முல்லைத்தீவு, ஜுலை 10
முல்லைத்தீவில் கடந்த நான்கு நாள்களில் 2 ஆயிரத்து 8 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த 5 ஆம் திகதி புதுக்குடியிப்பு பிரதேசத்தில் முதியவர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும், நேற்றுமுன்தினம் ஆசிரியர்களுக்கான தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கையும் முன்னெடுக்கப் பட்டன.

முல்லை கல்வி வலயத்துக்கு உட்பட்ட ஆசிரியர்களுக்கு உண்ணாப்பிலவு மருத்துவமனையில் தடுப்பூசி ஏற்றப்பட்டது. அவர்களுடன் கடநத ஐந்து நாள்களில் 2 ஆயிரத்து 8 பேருக்கு தடுப்பூசி ஏற்றப்பட்டுள்ளது. அத்தோடு துணுக்காய் வலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்கும் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது என்று பிராந்திய சுகாதார பணிமனையின் அதிகாரிகள் தெரிவித்தனர். (ப-19)





# தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள அதிபர், ஆசிரியர்களும் முண்டியடிப்பு

## தென்மராட்சியில் இந்த நிலை

**சாவகச்சேரி, ஜுலை 10**

**தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்கள் ஆகியோருக்கு நேற்று கொவிட் - 19 தடுப்பூசி ஏற்றுவதற்கு அறிவிக்கப்பட்ட நிலையில் காலையில் சாவகச்சேரி சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பெருமளவானோர் கலந்துகொண்டனர்.**

தென்மராட்சி வலயப் பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் கல்விசார் அலுவலர்களுக்கு மட்டும் தடுப்பூசி ஏற்றப்படும் என நேற்றுமுன்தினம் அறிவிக்கப்பட்டதையடுத்து பெருமளவான அதிபர்கள், ஆசிரியர்கள் காலையிலேயே சுகாதார மருத்துவ அதிகாரிபணியகத்துக்கு வந்து நீண்டவரிசையில் காத்திருந்து தடுப்பூசி ஏற்றிக்கொண்டனர். விவரங்களைப் பதிவுசெய்த பின்னர் படையினர் மற்றும் சுகாதாரப் பகுதியினர் நான்கு இடங்களில் வைத்து தடுப்பூசி ஏற்றினர். இவர்களுடன் தடுப்பூசி ஏற்ற வந்த 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் முன்களப் பணியாளர்கள் ஆகியோருக்கும் தடுப்பூசி ஏற்றப்பட்டது. இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தில் வதியும் ஏனைய கல்வி வலயங்களைச் சேர்ந்த அதிபர்கள், ஆசிரியர்கள் வந்திருந்த போதிலும் அந்தந்த கல்வி வலயங்களில் தடுப்பூசி ஏற்றுமாறு திருப்பி அனுப்பப்பட்டனர். (ப-9)

# 5,842 பேருக்கு இதுவரை கிளிநொச்சியில் தடுப்பூசி



கிளிநொச்சி, ஜுலை 10
கிளிநொச்சி மாவட்டத்தில் இதுவரை 5ஆயிரத்து 842 பேருக்கு கொவிட் - 19 தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது என பிராந்திய தொற்று நோயியல் மருத்துவ அதிகாரி மருத்துவர் நிமால் அருமைநாதன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;
சுகாதாரப் பணியாளர்கள், ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டோர் இதில் உள்ளடங்குகின்றனர். இவர்களில் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் மற்றும் ஆடைத் தொழிற்சாலைப் பணியாளர்கள் என 5 ஆயிரத்து 11 பேருக்கும் சுகாதாரப்பணியாளர்கள் 831 பேருக்கும் தடுப்பூசி செலுத்தப்பட்டுள்ளது. இதில் சுகாதாரப் பணியாளர்கள் 781 பேருக்கு இரண்டாவது தடுப்பூசியும் செலுத்தப்பட்டுள்ளது. தொடர்ந்தும் தடுப்பூசி செலுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனை ஒரு வாய்ப்பாகப் பயன்படுத்தி பெற்றுக்கொள்ள வேண்டும் - என்றார். (ப-214)

# மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி

உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் சுமார் ஆயிரம் மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்படும் என்று இராணுவத் தளபதி சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார். சில நாடுகள் பைஸர் தடுப்பூசி செலுத்தாதவர்களை, தங்கள் நாட்டுக்குள் நுழைய அனுமதிப்பதில்லை.

இதனால் உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் அதிகளவான மாணவர்கள் தமக்கு பைஸர் தடுப்பூசி செலுத்துமாறு கோரிக்கை விடுத்துள்ளனர்.

அதற்கமைவாக சுமார் 987 மாணவர்களுக்கு பைஸர் தடுப்பூசி செலுத்தப்படும். சுமார் 2 ஆயிரத்து 100 மாணவர்களுக்கு, அவர்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதற்கு முன்பு சைனோஃபோர்ம் தடுப்பூசி செலுத்தப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

# முல்லை. மாவட்டத்தில் 898 பேருக்குத் தடுப்பூசி

## ஆசிரியர்களுக்கு சந்தர்ப்பம்

கொழும்பு, ஜுலை 10
முல்லைத்தீவு மாவட்டத்தில் பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் என 898 பேருக்கு நேற்று முன்தினம் தடுப்பூசிகள் ஏற்றப்பட்டுள்ளன என்று முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய சுகாதார பணிமனை தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மு.உமாசங்கர் தெரிவிக்கையில்,
முல்லைத்தீவு உண்ணாப்பிலவு மருத்துவமனையில் 440 ஆசிரியர்கள் மற்றும் 58 முதியவர்கள் தடுப்பூசிகளைப் பெற்றனர்.

ஆசிரியர்கள் தமக்கென ஒதுக்கப்பட்டுள்ள தடுப்பூசிகளை சரியான முறையில் பயன்படுத்திக்கொள்ள வேண்டும். இந்த மாவட்டத்தைச் சேர்ந்த ஆசிரியர்களுக்காக 2 ஆயிரத்து 200 தடுப்பூசிகள் ஒதுக்கப்பட்டுள்ளன.

புதுக்குடியிருப்பு மற்றும் கரைதுறைப்பற்று பிரதேசங்களில் உள்ள பெரும்பாலான ஆசிரியர்கள் ஆர்வத்துடன் தடுப்பூசியைப் பெற்றுள்ளனர்.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் வசித்து வெளி மாவட்டங்களில் களப்பணியாற்றும் ஆசிரியர்களுக்கும் முல்லைத்தீவு மாவட்டத்தில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான விபரங்கள் அறிவிக்கப்படும் - என்றார். (ஒ.4,19)

# சுகாதாரச் சிற்றூழியருக்கும் தடுப்பூசி வழங்குமாறு கோரிக்கை

கிளிநொச்சி, ஜுலை 10
கிளிநொச்சி மாவட்டத்தின் பிரதேச சபைகளில் கடமையாற்றும் சுகாதாரச் சிற்றூழியர்களுக்கான கொவிட் - 19 தடுப்பூசி இதுவரை வழங்கப்படவில்லை என்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவர்கள் தெரிவிக்கையில்;
பிரதேச சபைகளில் கடமையாற்றும் சுகாதாரச் சிற்றூழியர்களுக்கான கொவிட்-19 தடுப்பூசி இதுவரை ஏற்றப்படவில்லை. நாங்கள் கொவிட் -19 தொற்றின் ஆரம்பத்தில் இருந்து இதுவரை மருத்துவமனைகள் மற்றும் கொவிட்-19 தொற்றாளர்கள் தங்கவைக்கப் பட்டுள்ள இடைத்தங்கல் நிலையங்கள் உள்ளிட்ட இடங்களில் இருந்து கழிவுகளை அகற்றி வருகின்றோம். ஆனால் இதுவரை முன்னுரிமைப்படுத்தி எமக்கு தடுப்பூசியைப் பெற்றுக்கொடுக்க இந்த அரசு நடவடிக்கை எடுகவில்லை. எங்களுக்கும், குடும்பங்கள், பிள்ளைகள் மற்றும் உறவுகள் என்று அனைவரும் இருக்கின்றனர். ஆனால் நாங்கள் நாளாந்தம் இந்தக் கழிவுகளை அகற்றி விட்டு வீடுகளுக்குச் செல்கின்றோம். இதனை கவனத்தில் எடுக்கவேண்டும். தற்போது காணப்படும் தடுப்பூசி வழங்கலில் எமக்கும் முன்னுரிமை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் - என்றனர்.

இது தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட பிராந்திய சுகாதாரப் பணிப்பாளரிடம் கேட்டபோது; அவர்களுக்கான தடுப்பூசி 12 ஆம் திகதிக்குப் பின்னர் கிடைக்கப்பெறும் என்றார். (ப-6)

# 'பிம்புற' தனிமைப்படுத்தலில்

கொழும்பு, ஜுலை 10
களுத்துறை மாவட்டத்தின் கொக்குலந்த கிராம சேவகர் பிரிவுக்கு உட்பட்ட பிம்புற பகுதி தனிமைப்படுத்தப்பட்டுள்ளது என்று கொவிட்-19 பரவலைத் தடுக்கும் தேசிய செயற்பாட்டு மையத்தின் பிரதானியும், இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

அத்துடன் 4 கிராம சேவகர் பிரிவுகள் தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன.

மன்னார் மற்றும் கேகாலை மாவட்டங்களைச் சேர்ந்த நான்கு கிராம சேவகர் பிரிவுகளே தனிமைப்படுத்தலில் இருந்து விடுவிக்கப்பட்டுள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனித உரிமை மீறலில் இலங்கை படுமோசம்

## இங்கிலாந்து தொடர் அழுத்தம்

**கொழும்பு,ஜூலை 10**

**இலங்கையில் மனித உரிமை மீறல்கள் தொடர்ந்து மோசமடைந்து வருகின்றன. இதனால் இங்கிலாந்து இலங்கைக்கு தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.**



வெளிநாட்டு மற்றும் பொதுநலவாய விவகாரங்களுக்கான இராஜாங்க செயலாளரும், ஐக்கிய இராச்சியத்தின் முதல் இராஜாங்க செயலாளருமான டொமினிக் ராப்பால், நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் இந்த விடயம் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் ஒட்டுமொத்த மனித உரிமைகள் 2020 ஆம் ஆண்டில் தொடர்ந்து மோசமடைந்துள்ளன. கொரோனாத் தொற்றையும் மீறி அரசு சுதந்திரமான மற்றும் அமைதியான முறையில் நாடாளுமன்றத் தேர்தல்களை நடத்தியது.

அடக்குமுறைகளின்போது மத ரீதியிலான சடங்குகளைக் கடைப்பிடிக்கும் சமூகங்கள் மீது தடைகள், குற்றச்சாட்டுக்கள் இன்றி நீண்ட கால தடுப்புக் காவலில் வைத்தல், மற்றும் மோதலுக்குப் பிந்தைய பொறுப்புக்கூறல் மற்றும் நல்லிணக்கத்தில் பல பின்னடைவுகள் இருந்தன.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில், இலங்கை அரசு 30/1, 34/1, மற்றும் 40/1 ஆகிய தீர்மானங்களுக்கு வழங்கிய தனது ஆதரவை திரும்பப் பெற்றது. இவற்றுக்குப் பதிலாக போருக்குப் பிந்தைய இடைக்கால நீதி, நல்லிணக்கம் மற்றும் பொறுப்புக்கூறலுக்கான உள்நாட்டுப் பொறிமுறையை நடைமுறைப்படுத்துவோம் என்று அறிவித்தது. எனினும், இதில் எந்த முன்னேற்றமும் இல்லை. அதே நேரத்தில் அரசு சாரா நிறுவனங்களுக்கான செயலகம் போன்ற பொது மக்கள் செயற்பாடுகள் பாதுகாப்பு அமைச்சின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்பட்டன. அரசு அரசமைப்பின் 20 வது திருத்தத்தை நிறைவேற்றியது. இது நீதித்துறை மற்றும் சுயாதீன நிறுவனங்களுக்கான நியமனங்கள்மீது நிறைவேற்று அதிகாரத்தை நீடித்தது. மோதல், ஸ்திரத்தன்மை மற்றும் பாதுகாப்பு நிதித் திட்டத்தின் மூலமாகவும், கொரோனாவின் போதும், பாலியல் மற்றும் பாலின அடிப்படையிலான வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு இங்கிலாந்து ஆதரவளித்தது. இந்த ஆண்டு முழுவதும், பயங்கரவாத தடுப்புச் சட்டத்தை (பி.டி.ஏ) அரசு தொடர்ந்து பயன்படுத்தியது.

இந்தச் சட்டத்தை மறுஆய்வு செய்ய மனிதவள ஆணையத்தின் 43 ஆவது அமர்வில் புதுப்பிக்கப்பட்ட உறுதிமொழி இருந்தபோதிலும் அதை கண்டுகொள்ளவில்லை. சட்டத்தரணிகள், ஊடகவியலாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் மற்றும் மனித உரிமைகள், ஊழல் எதிர்ப்பு ஆகியவற்றில் பணியாற்றும் தனிநபர்கள் ஆகியோருக்கு அச்சுறுத்தல் கண்காணிப்பு மற்றும் இணைய துஸ்பிரயோகம் அதிகரிப்பதை சர்வதேச உரிமைகள் குழுக்கள் குறிப்பிட்டன.

இலங்கையின் மனித உரிமைகள் ஆணையம், காவலில் இறப்புக்கள் அதிகரிப்பதை முன்னிலைப்படுத்த பொலிஸ்மா அதிபருக்கு கடிதம் எழுதியதுடன், சிறை ஆய்வை வெளியிட்டது.

எனவே 2021 ஆம் ஆண்டில், மனித உரிமைகள், பாலின சமத்துவம், சிறுபான்மையினர் மற்றும் பாதிக்கப்படக்கூடிய அனைவருக்குமான பாதுகாப்பு ஆகியவற்றில் இங்கிலாந்து தொடர்ந்து அழுத்தம் கொடுக்கும்- என்றுள்ளது. (ஒ.4)

## இரு அமைச்சர்களின் ஆசனங்கள் மாற்றம்

கொழும்பு,ஜூலை 10

நிதியமைச்சர் பஸில் ராஜபக்சவுக்கு நாடாளுமன்றின் முன்வரிசையில் 9ஆம் இலக்க ஆசனம் ஒதுக்கப்பட்டதால், இரண்டு முக்கிய அமைச்சர்களின் ஆசனங்கள் மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அதற்கமைவாக நீதி அமைச்சர் அலி சப்ரி மற்றும் துறைமுக அமைச்சர் ரோஹித்த அபேகுணவர்தன ஆகியோரின் ஆசனங்களே மாற்றப்பட்டுள்ளன. அவர்கள் இருவருக்கும் இரண்டாம் வரிசையில் ஆசனங்கள் ஒதுக்கப்பட்டுள்ளன. (ஒ.4)

## பொலிஸ் இராஜ்ஜியமாக மாற்றமடையும் இலங்கை

### ஐ.ம.சக்தி கடும் எதிர்ப்பு

கொழும்பு,ஜூலை 10

இலங்கை பொலிஸ் இராஜ்ஜியமாக மாற்றமடைந்து வருகின்றது. மக்கள் மீதான அடக்குமுறை மற்றும் பொலிஸ் அராஜகத்தை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கோத்தாபய - மஹிந்த அரசு தோல்வியடைந்து விட்டது என்பதை மூடிமறைப்பதற்காக, மக்கள் மத்தியில் எழுகின்ற போராட்டங்கள், எதிர்ப்பை அடக்குறையின் ஊடாக கையாள முயற்சிக்கின்றது. அரசமைப்பு. ஜனநாயகத்தின் ஊடாக கருத்துச் சுதந்திரத்தைப் பறிப்பதற்கு அரசு முயற்சிக்கின்றது.

பொலிஸ் ஊடாக பொலிஸ் இராஜ்ஜியத்தை இலங்கையில் ஏற்படுத்த முயற்சிக்கின்றது. மக்களின் உரிமைகளை கொவிட் சட்டம் என்று கூறி அவற்றைப் பறிக்கப் பார்க்கின்றது. அரசின் இந்த முயற்சிகளை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கின்றோம். சுகாதார நெறிமுறைகளைப் பின்பற்றி ஆர்ப்பாட்டங்களை நடத்திய அரசியல்வாதிகள், மக்கள் என பலரையும் பொலிஸார் கைதுசெய்துள்ளனர். கைதுசெய்யப்பட்டுள்ள அரசியல் வாதிகள் மற்றும் மக்களின் உரிமைகள், கருத்துச் சுதந்தி ரத்தை நீதிமன்றம் மதித்து அவர்களுக்குப் பிணை விடுதலையை அளித்தது. எனினும் அவர்களை பலவந்தமாக இடைத்தங்கல் நிலையங்களுக்கு பொலிஸ் அழைத்துச் சென்றுள்ளது. இது சட்டவிரோதமான செயற்பாடாகும்.

இலங்கையிலிருந்து தொழில்வாய்ப்பு மற்றும் நாட்டை விட்டுச் செல்வதற்காக சுமார் ஆறரை லட்சம் பேர் விண்ணப்பித்துள்ளனர்.

இலங்கை வரலாற்றில் அதிகூடியவளவானவர்கள் நாட்டை விட்டுச்செல்ல முயற்சி செய்கின்ற சந்தர்ப்பமாக இது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது. என்றார். (ஒ.4)

## பஸில் சகலதுறை வல்லுநர்

கொழும்பு,ஜூலை 10

பஸில் ராஜபக்ச இலங்கை அரசியல் களத்தில் சகலதுறை ஆட்டக்காரரே. அவரின் அதிரடி ஆட்டத்தைப் பொறுத்திருந்து பாருங்கள் என்று அமைச்சர் ரோஹித அபேகுணவர்தன தெரிவித்தார். பஸில் ராஜபக்சவின் நாடாளுமன்ற வருகை தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கிரிக்கெட் அணியொன்றை எடுத்துக்கொண்டால் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பில் தேர்ச்சி பெற்றவர்கள் இருப்பார்கள். ஆனால், சகலதுறை ஆட்டக்காரர்களுக்கு எல்லாம் தெரியும். இவ்வாறுதான் இலங்கை அரசியல் களத்தில் பஸில் ராஜபக்ச சகலதுறை ஆட்டக்காரர். அவரின் அதிரடி ஆட்டத்தைப் பொறுத்திருந்து பாருங்கள்- என்றார். (ஒ.4)

## அரசியல் பயணத்தை ஆரம்பித்தார் ரணில்

கொழும்பு,ஜூலை 10

ஐக்கிய தேசியக் கட்சியின் எதிர்கால பயணம் தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அபிப்ராயங்களைப் பகிர்ந்துகொள்ளும் நடவடிக்கையை ரணில் விக்கிரமசிங்க ஆரம்பித்துள்ளார்.

கடந்த செவ்வாய்க்கிழமை முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட நாடாளுமன்ற அமர்வுகள் தொடக்கம், பல தடவைகள் எதிர்க்கட்சி உறுப்பினர்களுடன் ரணில் விக்கிரமசிங்க தனது அரசியல் பயணத்தைப் பகிர்ந்துகொண்டுள்ளார். தற்போதைய எதிர்க்கட்சி மற்றும் ஆளும் கட்சியின் பல உறுப்பினர்களுக்கு, அடுத்த பொதுத் தேர்தலில் வெற்றி பெற முடியாததை அடிப்படையாக வைத்து, புதிய முகங்களை பொதுத் தேர்தலில் போட்டியிடச் செய்வதை எதிர்பார்ப்பது குறித்தும் ரணில் விக்கிரமசிங்க தனது கருத்துகளைப் பரிமாறிக்கொண்டார் என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ.4)

## மக்களின் இறையாண்மையை முற்றிலும் புறக்கணித்தது அரசு

### மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டு

கொழும்பு,ஜூலை 10

ஜனாதிபதி மற்றும் பிரதமரின் சகோதரர் பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள விடயமானது, அரசமைப்பு மற்றும் மக்களின் இறையாண்மை ஆகியவற்றை முற்றிலும் புறக்கணிக்கும் செயற்பாடாகவுள்ளது என்று மாற்றுக்கொள்கைகளுக்கான நிலையம் சுட்டிக்காட்டியுள்ளது. இது தொடர்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது.

இலங்கையில் கடந்த வருடம் ஓகஸ்ட் மாதம் இடம்பெற்ற நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்போது, சிறிலங்கா பொதுஜன பெரமுனவால் சமர்ப்பிக்கப்பட்ட மாவட்ட ரீதியான வேட்பாளர் பட்டியல் மற்றும் தேசிய பட்டியல் ஆகியவற்றில் பஸில் ராஜபக்சவின் பெயர் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான நிலையில் பஸில் ராஜபக்ச வெற்றிடமாகியிருக்கும் தேசியப்பட்டியல் ஆசனத்துக்கு நியமிக்கப்பட்டுள்ளார். இந்த விடயமானது, அரசமைப்பு மற்றும் மக்களின் இறையாண்மையை முற்றிலும் புறக்கணிக்கும் செயற்பாடாகவுள்ளது.

அதுமாத்திரமன்றி இரட்டைப் பிரஜாவுரிமையைக் கொண்டிருந்தமையால், பஸில் ராஜபக்ச நாடாளுமன்ற உறுப்பினராகும் தகுதியை இழந்துள்ளார். அரசியல் கட்சிகள் தமது நோக்கத்துக்காக வடிவமைக்கப்பட்ட வெற்றிடங்களை நிரப்ப விரும்பும் நபர்களை நியமிக்க அனுமதிப்பது, மக்களின் உரிமையின் மதிப்பை குறைமதிப்புக்கு உட்படுத்துவதாக அமையும்- என்றுள்ளது. (ஒ.4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரச்சினைகள் இருக்கின்றமையால்தான் பொதுமக்கள் வீதிக்கு இறங்குகின்றனர்

முருத்தெட்டுவே ஆனந்த தேரர் சுட்டிக்காட்டு



**கொழும்பு, ஜுலை 10**

**பொதுமக்களின் கோரிக்கை குறித்து அரசு கவனம் செலுத்த வேண்டும். பிரச்சினை இருப்பதாலேயே மக்கள் வீதிக்கு இறங்குகின்றனர். பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து நாடுதழுவிய ரீதியில் பொதுமக்கள் முன்னெடுத்துள்ள போராட்டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயகத்துக்கு முற்றிலும் விரோதமானது.**

இவ்வாறு தெரிவித்துள்ளார், அபயராம விகாரையின் விகாராதிபதி முருத்தெட்டுவே ஆனந்த தேரர். குறித்த விகாரையில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொவிட் 19 வைரஸ் தாக்கத்தை கருத்திற்கொண்டு போராட்டம், ஒன்றுகூடல் ஆகியவற்றுக்கு மறு அறிவித்தல்வரை தடை விதிக்கப்பட்டுள்ளது. பொதுமக்கள் தனியாள் இடைவெளியை பின்பற்றி போராட்டத்தில் ஈடுப்பட்டாலும் பொலிஸார் அதனை கலவரமாக மாற்றிவிடுகிறார்கள். போராட்டக்காரர்களுக்கும், பொலிஸாருக்கும் இடையிலான முரண்பாடுகள் பெரும் விளைவுகளை ஏற்படுத்தும்.

போராட்டத்தில் ஈடுபடுபவர்களை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்குவது ஜனநாயக கொள்கைக்கு முற்றிலும் விரோதமானது.

நாட்டின் ஊடகத்துறை மற்றும் ஜனநாய உரிமை குறித்து சர்வதேசம் கூர்மையாக அவதானித்துக் கொண்டிருக்கும் வேளையில் இவ்வாறான செயற்பாடுகளும் இடம்பெறுகின்றமை நாட்டை மேலும் பலவீனப்படுத்தும். ஜனநாயக கொள்கைக்கு முரணான செயற்பாடுகளில் ஈடுப்படுவதை அரசும், பொலிஸாரும் தவிர்த்துக்கொள்ள வேண்டும். என்றார். (த-இ)



# அரசிலிருந்து வெளியேற சு.கவுக்குள் கடும் அழுத்தம்

*இப்போதைக்கு வேண்டாமென்று அதன் தலைவர் மைத்திரி முடிவு*

கொழும்பு, ஜுலை 10

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன தலைமையிலான அரச கூட்டணியிலிருந்து ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி வெளியேறவேண்டுமென அந்தக்கட்சியின் மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சிலர் கோரிக்கை முன்வைத்துள்ளனர். எனினும், அந்தக் கோரிக்கையை நிராகரித்த கட்சித் தலைவர் மைத்திரிபால சிறிசேன, அரசுடன் முரண்படுவதைவிடவும் கட்சி செயற்பாடுகளை கிராம மட்டத்தில் பலப்படுத்துவதற்கான நகர்வையே தற்போதைய சூழ்நிலையில் முன்னெடுக்க வேண்டும் என்று சுட்டிக்காட்டியுள்ளார் என்று அறியமுடிகின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் விசேட மத்தியசெயற்குழுக் கூட்டம் நேற்றுமுன்தினம் இரவு மைத்திரிபால சிறிசேன தலைமையில் நடைபெற்றது.

"அரச கூட்டணிக்குள் சுதந்திரக்கட்சிக்கு பாகுபாடு காட்டப்படுகின்றது. கிராம மட்டத்திலும் மொட்டு கட்சி உறுப்பினர்களால் புறக்கணிப்பு தொடர்கின்றது. இனியும் அரசுடன் இணைந்து பயணிப்பதில் பயனில்லை. எனவே, வெளியேறும் அறிவிப்பை விடுக்கவேண்டும்." என்று இந்தக்கூட்டத்தில் பங்கேற்ற பெரும்பாலான மத்திய செயற்குழு உறுப்பினர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

ஆனால் "இது விடயத்தில் அவசரப்பட்டு முடிவெடுக்கக்கூடாது. தற்போதைய சூழ்நிலையில் அரசிலிருந்து வெளியேறுவது ஏற்புடைய நடவடிக்கையாக அமையாது. அவ்வாறு நடைபெற்றால் கைதுகள், பழிவாங்கல்கள் இடம்பெறக்கூடும்." என்று மேலும் சில செயற்குழு உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

இதனையடுத்து கட்சியை மக்கள் மத்திக்கு கொண்டுசெல்லும் வகையில் பலப்படுத்தல் நடவடிக்கைகள் இடம்பெறவேண்டும் எனவும், தொகுதி மட்டத்திலான பொறிமுறை பலப்படுத்தப்பட வேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. வெளியேறுவதில் அவசரப்படாமல், கட்சியை பலப்படுத்துவதில் முன்னுரிமையளித்து செயற்படுவதே சிறப்பு என்ற திட்டத்தை மைத்திரியும் கூறியுள்ளார். (த-44)

அரசின் ஆள்கள் என்றுகூறி

# வலி.கிழக்கு பிரதேச சபையின் தவிசாளருக்கு அச்சுறுத்தல்

*யாழ்.பொலிஸில் முறைப்பாடு*


யாழ்ப்பாணம், ஜுலை 10

யாழ். நகரில் 'அரசின் ஆள்கள்' எனக் கூறி பிக்கப் வாகனத்தில் வந்தவர்கள் தம்மை அச்சுறுத்தியதுடன் தாக்கவும் முயற்சித்தனர் என்று தெரிவித்த, வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷ், குறித்த சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். நேற்றுப் பிற்பகல் 04.20 மணிக்கு தவிசாளர் உத்தியோகபூர்வ வாகனத்தில் யாழ்ப்பாணம் ஸ்ரான்லி வீதியின் பழைய தபால் கந்தோர் ஒழுங்கை ஊடாக பயணித்தார். அப்போது மத்திய மாகாண இலக்கத்தகடு கொண்ட சொகுசு பிக்கப் (CP PP - 0595) வாகனத்தில் ஒரு குழுவினர் எச்சரித்தவாறு தவிசாளரின் வாகனத்தை முந்திச் சென்றுள்ளனர்.

முந்திச் சென்றவர்கள் முன்னர் தனியார் நெடுந்தூர பேருந்து தரிப்பிடமாக பாவிக்கப்பட்ட வளாகத்துக்குள் தவிசாளரின் வாகனம் நிறுத்தப்பட்டவுடன் அந்த வளாகத்துக்குள் நுழைந்தனர். இதனைத்தொடர்ந்து தவிசாளர் என்ன பிரச்சினை எனக்கேட்டபோது, அவர்கள் தூஷண வார்த்தைகளை பேசியவாறு தவிசாளரை நோக்கி வந்தனர்.

தவிசாளார் தொலைபேசியில் அவசர பொலிஸ் (119) இலக்கத்துக்கு முயற்சித்தபோது, தாம் அரசின் ஆள்கள் எனக் கூறியவாறு தவிசாளரைத் தாக்குவதற்கு கட்டட உடைவு கல் ஒன்றை அந்தக் குழுவில் வந்திருந்த ஒருவர் தூக்கி வீச எத்தனித்தார் எனினும் அங்கு நின்ற ஒருவரால் அவர் தடுக்கப்பட்டார். மக்கள் ஒன்றுகூடியவுடன் தவிசாளர் தன்னை அச்சுறுத்தியவர்களை படம்பிடித்தபோது , மிரட்டிய கும்பலும் படம் பிடித்தவாறு விலகிச்சென்றது. சுற்றிவர சி.சி.டி.வி. கமராக்கள் பொருத்தப்பட்டுள்ள இடமொன்றில் இவ்வாறு அச்சுறுத்தல் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-20)

# எரிபொருள் விலையை குறைக்க முயற்சியாம்



கொழும்பு, ஜுலை 10

பொதுமக்களின் நலன் கருதி எரிபொருள் விலையை குறைப்பது தொடர்பான அனைத்து முயற்சிகளும் மேற்கொள்ளப்படும் என நிதி அமைச்சர் பசில் ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

அரசு இதுவரையில் முன்னெடுத்த நடவடிக்கைகளில் ஏதேனும் குறைபாடுகள் இருக்குமாயின் அவை நிவர்த்தி செய்யப்பட்டு நாட்டை கட்டியெழுப்ப சகல முயற்சிகளும் மேற்கொள்ளப்படும்.

நிதி அமைச்சில் தமது கடைமைகளை பொறுப்பேற்ற பின்னர் பெல்லங்வில ரஜமஹா விகாரைக்கு நேற்றுமுன்தினம் மாலை பயணம் மேற்கொண்டு வழிபாடுகளில் ஈடுபட்ட நிதி அமைச்சர் அங்கு செய்தியாளர்களை சந்தித்தபோதே இவ்வாறு தெரிவித்தார். நாட்டின் பொருளாதார நிலைமைகளை கவனத்திற்கொண்டு ஜனாதிபதி இது தொடர்பில் தீர்மானங்களை மேற்கொள்வார். என்று மேலும் தெரிவித்தார். (த-இ)

# முல்லையில் வாள்வெட்டுத் தாக்குதல்: யாழில் கைதான அறுவருக்கும் பிணை

முல்லைத்தீவு, ஜுலை 10

முல்லைத்தீவில் இடம்பெற்ற தாக்குதல் சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணத்தில் கைதுசெய்யப்பட்ட ஆறு பேரையும் முல்லைத்தீவு நீதிவான் மன்று பிணையில் விடுதலை செய்தது.

கடந்த 27ஆம் திகதி முல்லைத்தீவு கள்ளப்பாட்டுப் பகுதியில் வீடு ஒன்றுக்குள் நுழைந்த கும்பல் ஒன்று, வீட்டில் இருந்தவர்மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தியதுடன், வாகனங்கள் இரண்டின்மீது தீ வைத்துவிட்டுத் தப்பிச் சென்றிருந்தது. இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வந்த நிலையில், யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத்தடுப்புப் பொலிஸாரால் நவாலியில் வைத்து கடந்த 7 ஆம் திகதி ஒருவர் கைதுசெய்யப்பட்டார். அவர் வழங்கிய வாக்குமூலத்தின் அடிப்படையில் மேலும் ஐவர் கைதுசெய்யப்பட்டனர். குறித்த ஆறு சந்தேக நபர்களும் முல்லைத்தீவு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

விசாரணைகளைத் தொடர்ந்து அவர்கள் நேற்றுமுன்தினம் முல்லைத்தீவு மாவட்ட நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டனர். தலா 2 லட்சம் ரூபா பெறுமதியான இரண்டு ஆள்பிணையில் செல்லுமாறு குறித்த ஆறு பேரையும் மன்று விடுதலைசெய்தது. இவர்கள் மீதான வழக்கு விசாரணை எதிர்வரும் நவம்பர் மாதம் 24 ஆம் திகதிவரை ஒத்திவைக்கப்பட்டது. (ப-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 03 . 05 . 1939



மறைவு 10 . 06 . 2021

## அமரர் நாகலிங்கம் வேதநாயகி
### (கண்டு)

அம்மா!
நீங்கள் எம்முடன் வாழ்ந்த போது
இன்பம் என்பது இந்த பிரபஞ்சமளவாகி
கணத்துக்கு கணம் வளர்ந்து சென்றது
உங்களைப் பிரிந்தவுடன் அதுவே கணத்துக்கு
கணம் விரியும் சோகமாக உருவெடுத்துள்ளது
மனதில் "வெறுமை" என்னும் வறுமை வாட்டுகின்றது
ஆனாலும் நாம் திடசங்கற்பம் கொள்கின்றோம்
உபதேசங்களுக்கு அப்பால் நீங்கள்
வாழ்ந்து காட்டிய சீரிய வாழ்க்கையை
நாமும் வாழ்வோம் என்று

**குறிப்பு :** Covid - 19 நிலைமை காரணமாக அனைத்து அன்புள்ளங்களையும் நிகழ்வுக்கு அழைக்க முடியாதுள்ளது என்பதை மன வருத்தத்துடன் பகிர்ந்து கொள்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

குடும்பத்தினர்

---

வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்.
சந்தைகள், இறைச்சிக்கடைகளினை
பகிரங்க ஏலத்தில் குத்தகைக்கு வழங்குவதற்கான

## கேள்வி அறிவித்தல் - 2021

சபையினால் கீழ்க்குறிப்பிடப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகளினை 2021 ஆம் ஆண்டின் குறிக்கப்பட்ட காலப்பகுதிக்கு (01.08.2021 - 31.12.2021) குத்தகைக்கு வழங்குவதற்கான பகிரங்க ஏலக்கேள்விகள் கோரப்படுகின்றன.

ஏலம் நடைபெறும் திகதி : 2021.07.20 (செவ்வாய்கிழமை) முற்பகல் 11.00 மணி.
இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகம், புத்தூர்

| தொ. இல | விபரம் | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக்கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் |
|---|---|---|---|
| | **அச்சுவேலி உப அலுவலகம்** | | |
| 01 | அச்சுவேலி பொதுச்சந்தையும் துவிச்சக்கரவண்டி தரிப்பிடமும் மற்றும் அச்சுவேலி பஸ் நிலைய வாகன தரிப்பிடமும் | 250.00 | 25000.00 |
| 02 | வளலாய் தம்பாலை பொதுச்சந்தை | 250.00 | 2000.00 |
| | **புத்தூர் உப அலுவலகம்** | | |
| 01 | புத்தூர் பொதுச்சந்தை | 250.00 | 2000.00 |
| | **கோப்பாய் உப அலுவலகம்** | | |
| 01 | கோப்பாய் ஆட்டிறைச்சிக்கடை | 250.00 | 3000.00 |
| | **உரும்பிராய் உப அலுவலகம்** | | |
| 01 | உரும்பிராய் கோழி இறைச்சிக்கடை | 250.00 | 3000.00 |

ஏலத்தில் பங்கு கொள்பவர்கள் கேள்விப்படிவக்கட்டணம் ரூபா 250.00 இனை செலுத்துதல் வேண்டும். ஏலக்கேள்வியில் தெரிவுசெய்யப்படும் ஏலதாரர்கள் உடனடியாக மீளளிக்கக்கூடிய வைப்புத்தொகையினை சபைக்கு செலுத்துதல் வேண்டும்.

ஏலத்தில் பங்குபெற விரும்புபவர்கள் அவர்களது அடையாள அட்டையினை கொண்டு வருவதுடன் அதன் நிழற்படப்பிரதியையும் கிராம சேவையாளரால் வழங்கப்பட்ட வதிவிடச்சான்றிதழ் அல்லது உரிய பெயரிலுள்ள மின்சாரப்பட்டியல் பிரதி அல்லது வங்கிக்கணக்குப்புத்தகத்தின் பிரதி ஏதாவதொன்று சமர்ப்பித்தல் வேண்டும். ஏலக்கேள்விக்கான ஆரம்ப கேள்வித்தொகையினை தலைமை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.


சித்தியடையும் கேள்விதாரர் கேள்வித்தொகையின் 1/3 பகுதியினை 2021.07.26 ஆம் திகதி நண்பகல் 02.00 மணிக்கு முன்பாக சபையின் உப அலுவலகத்தில் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் ஒன்றினை செய்து கொள்ளல் வேண்டும்.

தியாகராஜா நிரோஷ்
தவிசாளர்
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்
2021.07.10

---

# மரண அறிவித்தல்

மலர்வு 17 . 10 . 1933



உதிர்வு 03 . 07 . 2021

## செல்லையா பரமலிங்கம்

உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும், 713, சிவிக்சென்ரர் வட்டக்கச்சி, செனபோ டென்மார்க் ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லையா பரமலிங்கம் 03.07.2021 அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற செல்லையா தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற முத்துக்குமார் சின்னையா சின்னப்பிள்ளை (சாவகச்சேரி) தம்பதிகளின் மருமகனும், காலஞ்சென்ற நாகேஸ்வரியின்அன்புக் கணவரும், காலம் சென்றவர்களான சீவரத்தினம், இராசரத்தினம், திருப்பதியம்மா, மற்றும் இராசலட்சுமி ஆகியோரின் அன்புச்சகோதரரும், காலஞ்சென்ற பாலசந்திரன் (சந்திரன்), ஞானசந்திரன் (ராசா), சிவச்சந்திரன் (அப்பன்), ஜமுனா (ராசாத்தி), பத்மசோதி (சோதி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், கனேஸ்வரி, ரஜந்தி, கலைவாணி, உதயகுமாரன், கனேஸ்வரன் ஆகியோரின் அன்பு மாமனாரும், பாலதர்ஷன், அனுஜன், சஞ்சீவன், பூர்வஜன் (காலஞ்சென்றவர்) சிறிவர்ஷன், பிரதீப், பிரவீனா, பிரதீபா, சிந்துஜா, தனுஜா, மிதுஜா, நிவேதன், ரிதன், நிலான் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் டென்மார்க்கில் நடைபெறும்.


தகனக்கிரியை நடைபெறும் இடம்: Aabenraa kl.14
மேலதிக தொடர்புகளுக்கு: ஞானச்சந்திரன் (ராசா): 004520718780
சிவச்சந்திரன் (அப்பன்): 004560536353,
யமுனா (ராசாத்தி) : 004560126852
பத்மசோதி (சோதி) : 004542652244, பாலதர்ஸன் : [illegible]
தகவல் குடும்பத்தினர், டென்மார்க்

இடம்: Christians kirken Sonderborg. காலம் : 12.07.2021 திங்கட்கிழமை (12.00 - 14.00 )

---

# மரண அறிவித்தல்

பிறப்பு 08 . 01 . 1977



இறப்பு 08 . 07 . 2021

## கந்தையா பத்மரூபன்

சவரசீமா அல்வாயைப் பிறப்பிடமாகவும் கனடா ரொரன்டோவை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தையா பத்மரூபன் 08.07.2021 அகால மரணமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - மனோண்மணி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற சுந்தரலிங்கம் மற்றும் குணலட்சுமி (குணம்) ஆகியோரின் அன்பு மருமகனும், சுஜித, (சுஜா)வின் பாசமிகு கணவரும், நிஷாவின் அன்புத் தந்தையும், பத்மலோகன் (ஜேர்மனி), பத்மராதா (கனடா), பத்மலதா (அல்வாய்) பத்மராஜன் (பிரான்ஸ்), வனிதாதேவி (அல்வாய்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், அனுஷா, மனோ, வாசுகி, ஜெகதீசன் பாமினி (கனடா), சுதன் (கனடா), காலஞ்சென்ற மதன் ஆகியோரின் அன்பு மைத்துனனும், யோகராஜன், லக்சனா ஆகியோரின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.


வீரபத்திரர் கோயிலடி,
நீர்வேலி தெற்கு, நீர்வேலி.

தகவல்:
குணலட்சுமி (குணம்)

தொடர்புகளுக்கு குணலட்சுமி - 077 181 7745
075 998 5652 (Viber)
சுஜிதா (மனைவி)- 0016 4764 61985

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



அமரர்

## திரு. செல்லையா ஜெயராமச்சந்திரன் (ஜெயம்)

கடந்த (10.06.2021) வியாழக்கிழமையன்று இறைபதமடைந்த எமது குடும்பத்தலைவர் **அமரர் திரு. செல்லையா ஜெயராமச்சந்திரன் (ஜெயம்)** அவர்களின் 31ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியை இன்று (10.07.2021) சனிக்கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை தீர்த்தக்கரையில் நடைபெறும்.

அன்னாரின் மரணச் செய்தி அறிந்து ஓடோடி வந்து இறுதிக் கிரியைகளுக்கு வேண்டிய அனைத்து உதவிகளையும் செய்த உற்றார், உறவினர்கள், நண்பர்கள் மற்றும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்த உள்நாட்டு வெளிநாட்டு நல் உள்ளங்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்றோம்.

**காளிகோவிலடி, கோப்பாய் மத்தி,**
**கோப்பாய்.**

**குடும்பத்தினர்**

*சரவு...*

என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் அசேல குணவர்தன உறுதிப்படுத்தியுள்ளார். 13 பெண்களும், 30 ஆண்களும் நேற்றுமுன்தினம் இவ்வாறு உயிரிழந்துள்ளனர் என்று சுகாதார அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனா சாவுகளின் மொத்த எண்ணிக்கை 3 ஆயிரத்து 434 ஆக அதிகரித்துள்ளது.

இதேவேளை, நாட்டில் நேற்று ஆயிரத்து 537 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 71 ஆயிரத்து 483 ஆக அதிகரித்துள்ளது. கொரோனாவிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 லட்சத்து 41 ஆயிரத்து 35 ஆக உயர்வடைந்துள்ளது.

கொரோனாத் தொற்று காரணமாக மருத்துவமனைகள் மற்றும் இடைநிலை சிகிச்சை மையங்கள் என்பவற்றில் சிகிச்சை பெறுபவர்களின் எண்ணிக்கை 27 ஆயிரத்து 14 ஆக அதிகரித்துள்ளது என்றும் அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. (கு-22)

*கொரோனாவால்...*

தெரிவிக்கப்பட்டது.

வவுனியா, ஓமந்தை, அரசன்குளம் பகுதியைச் சேர்ந்த வயோதிபப் பெண் ஒருவரே உயிரிழந்தவராவார்.

அவர் சுகவீனம் காரணமாக கடந்த மாதம் வவுனியா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்தார். அவருக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். சோதனையில் கொவிட் 19 தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. இதனையடுத்து வவுனியா மருத்துவமனையின் கொரோனா சிகிச்சை விடுதியில் சேர்க்கப்பட்டிருந்தார். இந்தநிலையில், குருதி சுத்திகரிப்பு பிரிவில் நேற்று சிகிச்சைபெற்றபோது அவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது. (கு-110,18)

# டெங்கு ஒழிப்பு நடவடிக்கை


கிளிநொச்சி, ஜூலை 10

கண்டாவளை சுகாதார பணிமனையின் கீழ் உள்ள பொது இடங்களான பொலிஸ் நிலையம் மருத்துவமனை மற்றும் பொதுச்சந்தை என்பவற்றில் டெங்கு ஒழிப்பு நடவடிக்கை கடந்த புதன் கிழமை முன்னெடுக்கப்பட்டது. கிளிநொச்சி மாவட்ட டெங்கு ஒழிப்பு பிரிவு மருத்துவர்கள் மற்றும் டெங்கு ஒழிப்பு பிரிவினர் ஆகியோர் இந்த நடவடிக்கையில் ஈடுபட்டனர். (ஜ-113)



# 31ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம் 24 . 04 . 1940



மறைவு 10 . 06 . 2021

சிவகீத அடியார், இசைநாத இன்பமாமணி, திருவருட்செல்வர், பண்ணிசைக்கலைஞர்

## அமரர். வல்லிபுரம் நடராசா

(ஓய்வு பெற்ற ஆசிரியர் )

திதி : அமாவாசை

நாட்கள் முப்பத்தொன்று ஆனதுவோ
உங்கள் முகம் கண்டு ஆறவில்லை நம் இதயம்
அன்பும் பாசமும் நிறைந்த பொக்கிஷம் நீங்கள்
நித்தம் புலம்புகின்றோம் உங்கள் திருமுகம் காணாமல்
ஆறவில்லை எங்கள் துயர்
உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

**106, கலைமகள் வீதி,**
**அரியாலை, யாழ்ப்பாணம்.**

**உங்கள் பிரிவால் துயருறும்**
**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## நாகலிங்கம் தெய்வேந்திரம்

**(படவரைஞர் - Draughtsman, முன்னாள் உத்தியோகத்தர் நீர்ப்பாசன திணைக்களம், கட்டடங்கள் திணைக்களம்-இலங்கை, சௌதி)**

அரசடி, கொக்குவில் மேற்கு, கொக்குவிலை பிறப்பிடமாகவும் வன்னியசிங்கம் வீதி, தாவடி வடக்கு, கொக்குவிலை வசிப்பிடமாகவும் கொண்ட நாகலிங்கம் தெய்வேந்திரம் அவர்கள் நேற்று (09.07.2021) வெள்ளிக்கிழமை இறைபதம் எய்தினார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம் - சிவயோகம் தம்பதியரின் மகனும் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை நாகரத்தினம் தம்பதியரின் மருமகனும், ஸ்ரீரஞ்சினியின் அன்புக் கணவரும், ஜனகன் (ஊடகம், கொழும்பு), ஜெனனி (படவரைஞர்-கொழும்பு) ஆகியோரின் பாசமிகு தந்தையும், காலஞ்சென்றவர்களான கந்தசாமி, துரைராஜா மற்றும் மகிழரத்தினம், இராசலட்சுமி, பாக்கியலட்சுமி, தனபாலசிங்கம், இராஜகுலசிங்கம், இரத்தினசிங்கம் ஆகியோரின் சகோதரனும், காலஞ்சென்றவர்களான இராசதுரை (முன்னாள் பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்), நடேசபிள்ளை ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (09.07.2021) வெள்ளிக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தாவடி இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**தகவல்:**
**மனைவி, பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி

## சொக்கநாதன் யோகநாதன் (நாதன்)

நிறைவேற்றுப் பணிப்பாளர்,
சிறுவர்களுக்கான அபிவிருத்தி நிலையம் (CFCD)




தடைகள் தாண்டி
- தளரா உறுதியுடன்
நிலத்தை நேசித்தவரே!
ஊர் வாழ ஓய்வின்றி
களம் நின்ற பணியாளரே!
உழைக்கும் மானிடர்
- உயர்வு பெற
உரமாய் நின்றவரே!
காலம் நீளும் போது உங்கள்
கனவுகள் நிறைவேறும்.

*நீங்கா நினைவுகளுடன்...*

**பணியாளர்கள்,**
**ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (UNDP)**

# மரண அறிவித்தல்

தோற்றம் · 25 · 02 · 1951



மறைவு · 08 · 07 · 2021

## திரு. செல்லத்துரை தணிகாசலம் (தவம்)

வேலணை கிழக்கு செல்வநாயகம் வீதி, 2ம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், ஸ்டேஷன் வீதி, வெள்ளவத்தை, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை தணிகாசலம் அவர்கள் நேற்று முன்தினம் (08.07.2021) வியாழக்கிழமை மாலை 4.20 மணியளவில் கொழும்பில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை, கனகம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற இராஜசேகரம் மற்றும் பூமணி தம்பதிகளின் அன்பு மருமகனும், கல்பனாதேவியின் அன்பு கணவரும், சுகீதன் (Senior General Manager - Ideal Warren), அகலியா, இந்துஜா (Shirdi Advertising - உரிமையாளர்), அனோதன் ஆகியோரின் அன்பு தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை (11.07.2021) காலை 8.30 மணி தொடக்கம் கல்கிஸை மஹிந்த மலர்சாலையில் 02 ஆவது மாடியில் வைக்கப்பட்டு பிற்பகல் 2.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் ஆரம்பிக்கப்பட்டு மாலை 5.00 மணியளவில் கல்கிஸை பொதுமயானத்தில் தகனம் செய்யப்படும் என்பதை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**தகவல்: குடும்பத்தினர்**

**சுகீதன் 0777886570 (மகன்)**
**இந்துஜா 0771445563 (மகள்)**
**அனோதன் 0775 353 665 (மகன்)**
**ஜெகதீஸ்வரன் 0758636828 (சகோதரன்)**
**ரவீந்திரன் 0773 432 422 (சகோதரன்)**

நாட்டில் நிலவும் அசாதாரண நிலை காரணமாக அரச [illegible] உட்பட்டு இறுதி [illegible] நடைபெறும் என்பதை தெரிவித்துக்கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆர்ப்பாட்டம் செய்தவர்கள்

# மாற்றுடைகூட இல்லாமல் முல்லையில் தனிமைப்படுத்தலில்

## 'பெட்சீற்'களையே ஆடைகளாக அணியும் அவலம்

கொழும்பு, ஜூலை 10

கொழும்பில் ஆர்ப்பாட்டம் செய்தமையால் கைதுசெய்யப்பட்டு முல்லைத்தீவு தனிமைப்படுத்தல் முகாமில் வைக்கப்பட்டுள்ளவர்களுக்கு மாற்றுடைகள் வழங்கப்படவில்லை என்றும், அதனால் அவர்கள் படுக்கை விரிப்புகளையே ஆடையாகக் கட்டியிருக்கின்றனர் என்றும் விசனம் தெரிவிக்கப்படுகின்றது.

கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழக சட்டத்தை எதிர்த்து நாடாளுமன்றத்துக்கு அருகே நேற்றுமுன்தினம் நடைபெற்ற போராட்டத்தின்போது இலங்கை ஆசிரிய சங்க பொதுச் செயலாளர் ஜோசப் ஸ்ராலின் மற்றும் வேலையற்ற பட்டதாரிகள் சங்கத்தைச் சேர்ந்த தென்னே ஞானநந்த தேரர் ஆகியோர் உட்பட ஏராளமானோர் கைதுசெய்யப்பட்டிருந்தனர்.

அவர்கள் கொரோனாச் சட்டத்தை மீறினர் என்று குற்றம் சாட்டப்பட்டு பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டிருந்தனர். அவர்கள் நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டி ருந்தநிலையில், முல்லைத்தீவிலுள்ள விமானப் படைத் தளத்தில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், அவர்களுக்கு உரிய உடைகள் வழங்கப்படவில்லை என்றும் அதனாலேயே படுக்கை விரிப்புகளை அணிந்தபடியுள்ளனர் என்றும் கூறப்படுகின்றது. அவர்கள் படுக்கை விரிப்புகளை அணிந்தபடியுள்ள ஒளிப்படங்கள் வெளியாகியுள்ளன.

அவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டவர்களுக்கு நண்பகல் தொடக்கம் முறையான உணவு வழங்கப்படவில்லை, இரவில் அவர்களுக்கு ஒரு ரொட்டியும் வாழைப்பழமும் மட்டுமே வழங்கப்பட்டது என்றும் குற்றம்சாட்டப்படுகின்றது. (த-இ)

# திருமண நிகழ்வுகளுக்கான கட்டுப்பாடுகளில் திருத்தம்

கொழும்பு, ஜூலை 10

குறிப்பிட்ட எண்ணிக்கையான நபர்களுடன் திருமண நிகழ்வுகளை நடத்தவும், வழிபாட்டுத் தலங்களை திறந்து குறிப்பிட்ட எண்ணிக்கையானவர்களுடன் பூசை வழிபாடுகளை மேற்கொள்ளவும் அனுமதி வழங்கும் வகையில் அறிவிப்பு வெளியிடப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொரோனாத் தொற்று பரவல் காரணமாக விதிக்கப்பட்டுள்ள பல கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டு, பல திருத்தப்பட்ட விதிமுறைகளைக் கொண்டதாக புதிய சுகாதார வழிகாட்டுதல்கள் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தனவால் வெளியிடப்படவுள்ளது என்று இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார். தற்போதைய கட்டுப்பாடுகளின் படி, திருமணங்கள் தடைசெய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-இ)

# கேள்வி அறிவித்தல்

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

கீழ்க்காணும் உணவகத்தை நடாத்துவதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பதிவாளர் பணிமனையில் 26.07.2021 ஆம் திகதிமு.ப 10.00 மணி வரை பொறியிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

| | |
|---|---|
| சித்த மருத்துவ அலகு உணவகம் | கைதடி. யாழ்ப்பாணம். |

மீளளிக்கப்படும் கேள்விவைப்பு பணமாக ரூபா 2000/- உம் மீளளிக்கப்படாத கட்டண-மாக ரூபா 500/- உம் தனித்தனியாக மக்கள் வங்கியிலுள்ள யாழ்ப்பாணப் பல்கலைக் கழக கணக்கு இலக்கம் 162-1001-60000-880 இற்கு செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டினை சமர்ப்பித்து கேள்விப் படிவங்களைப் பல்கலைக்கழக நலச்சேவைகள் கிளையிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். மேற் குறிப்பிட்ட கேள்விப் படிவங்களில் அனுப்பப் படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். கடித உறையின் இடது பக்கமேல் மூலையில் விண்ணப்பிக்கும் உணவகத்தின் பெயர் தெளிவாககுறிப்பிடப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் யாழ்ப்பாணப் பல்கலைகழக நலச் சேவைகள் கிளைக்கு நேரடியாகவோ தொலைபேசி ஊடாகவோ (தொலைபேசி இல 021 222 6716) பெற்றுக்கொள்ளலாம்.

10.07.2021

**பதிவாளர்**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்**

# DEWMAS JOB BANK

வேலையாட்கள் தேவையா? 074 138 3368
யாழ் வேலை வாய்ப்புகளுக்கு dewmasweb.com
51, Amman Road, Nallur

# வேலையாட்கள் தேவை

ஐஸ்கிறீம் உற்பத்தி நிறுவனத்திறக்கு
- விற்பனை பிரதிநிதி.
- கணக்காளர் (ஆண்.பெண்).
- காசாளர் உடன் தேவை.

தொடர்புகளுக்கு: **076 0094 946**

# உடன் வேலைவாய்ப்பு

**வவுனியாவில் இயங்கிவரும் பிரல்யமான**
**ஐஸ்கிறீம்** விற்பனை **நிலையத்தில்** பணியாற்றுவதற்கு வேலையாட்க்ள் உடன் தேவை.
(வயது 18 - 50)
**077 378 8746**

# தென்னந்தோட்ட பணியாளர்கள் தேவை

பளையில் அமைந்துள்ள தென்னந்தோட்டத்தில் குடும்பமாக தங்கி நின்று வேலைசெய்ய வேலை யாட்கள் தேவை. (ரக்டர் ஓடத்தெரிந்தவர்க்ள் விரும்பத்தக்கது).
தொடர்புகளுக்கு: **071 902 5745, 077 651 0696**

# தவறவிடப்பட்டது

கடந்த கிழமை யாழ்ப்பாணம் கொக்குவில், நல்லூர், கச்சேரியடி யாழ். பேரூந்து நிலையம் ஆகிய நகரப்பகுதி களுக்கிடையில் கறுப்பு நிற கைப்பை. சிறிய கைபேஸ் ஒன்று IC. ஓய்வூதிய அட்டை. லைசன்ஸ் ஆகியவற்று டன் தவறவிடப்பட்டுள்ளது தயவுசெய்து கண்டெடுத்த வர்கள் கீழ்வரும் இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.

தகுந்த சன்மானம் வழங்கப்படும்

சதாசிவ்ஜயர் பாலச்சந்திரன் - 077 810 0312
காந்தி பாலச்சந்திரன் - 077 203 1354

# விலைக்கேள்விக்கான கோரல் (IFB-2021/02)

## கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களம் - வடக்கு மாகாண சபை

## மாகாண குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்திக் கொடை - 2021

01. வட மாகாண கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்கள பெறுகைக்குழுவின் தலைவரால் கீழ் வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்ட வேலைக்கான தகவுடையோரும் தகைமை பெற்ற வருமான விலைக் கேள்வியாளர்களிடமிருந்து முத்திரை பொறிக்கப்பட்ட விலைக்கேள்விகள் கோரப்படுகின்றன.

02. கேள்வியானது தேசிய போட்டி விலைக் கேள்வியின் மூலம் நடாத்தப்படும்.

03. ஒப்பந்தமானது நிர்மாண கைத்தொழில் அபிவிருத்தி அதிகாரசபையில் (CIDA), கட்டட நிர்மாணத்திற்கு கீழ்க்குறிப்பிடப்படும் தரத்தினைக் கொண்டிருப்பதோடு.பொதுநிதி சுற்றறிக்கை. இல.04/2016(i)ற்கு அமைவாக இவ்விலைமனுக் கோரலானது தகுந்த வியாபார அல்லது கம்பனிப் பதிவுகளை வடமாகாணத்திற்குள் கொண்டுள்ளதும் கறுப்புப்பட்டியலில் (Black list) சேர்த்துக் கொள்ளப்படாததுமான கேள்விதாரரிற்கு வழங்கப்படுவதற்கு உரித்துடைய்தாக மட்டுப்படுத்தப்பட்டுள்ளது. தகுதியான கேள்விகள் கிடைக்காதபட்சத்தில் கீழ் குறித்த அட்டவணையில் உள்ள CIDA தரத்திற்கு மேற்பட்ட கேள்விதாரரின் கேள்விகள் கருத்திற்கொள்ளப்படும்.

04. தேவையான தகைமைகள். விலைக்கேள்வி ஆவணத்தில் பகுதி 4ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் விலைக்கேள்வி ஆவணத்தில் Schedule இல் பகுதி 5ல் காட்டப்பட்டுள்ளது.

05. ஆர்வமுள்ள கேள்விதாரர்கள் பூரணமான கேள்வி ஆவணமொன்றை ஆங்கில மொழியில் **ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி கைதடி, யாழ்ப்பாணம் (தொலைபேசி இல - 021 205 7063, 021 223 2212)** என்னும் முகவரியிலிருந்து 12.07.2021ம் திகதியில் இருந்து 26.07.2021ம் திகதி வரை காலை 9.00 மணிக்கும் மாலை 3.00 மணிக்கும் இடையில் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா.**2000.00** செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். இத் தொகை, பணமாகச் செலுத்தப்படல் வேண்டும்.

06. கேள்வி இரு (மூலம். பிரதி) பிரதிகளில் தயாரித்து 28.07.2021ம் திகதியன்று **பி.ப.2.30** மணிக்கு அல்லது அதற்கு முன்னர் **ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் - வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி. கைதடி. யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமாகவோ ஒப்படைத்தல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட விலைக்கேள்விகள் நிராகரிக் கப்படும். கேள்விதாரர்கள் வேலைக்கான கேள்வி அடையாள இலக்கத்தினை தபாலுறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடுதல் வேண்டும். விலைக்கேள்விகள். அவைகளை மூடியவுடன் மேலேயுள்ள முகவரியில் சமூகமளித்திருக்கும் விலைக்கேள்வியாளர்களின் பிரதிநிதிகளது முன்னிலையில் திறக் கப்படும்.

07. கீழ்க்காட்டப்படும் கேள்விகள் கேள்விசமர்ப்பிக்கப்படும் இறுதித் திகதியிலிருந்து **63** நாட்களுக்கு செல்லு படியாகும்.

08. கேள்விப் பிணைவைப்புத்தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு அமையும்.

09. கேள்வி தொடர்பான முன் கேள்விச் சபைக்கூட்டம் **ஆணையாளர், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக் களம்- வ.மா, முதியோர் இல்ல வளாகம், கண்டி வீதி, கைதடி , யாழ்ப்பாணம்** என்னும் முகவரியில் 19.07.2021 அன்று காலை 11.00மணிக்கு இடம்பெறும்.

10. கேள்விகளை ஏற்றுக்கொள்வதும் நிராகரிப்பதும் பெறுகைக் குழுவின் இறுதித் தீர்மானத்திற்கு அமை வானதாகும்.

| | கேள்வி அடையாள இல | வேலை விபரம் | மதிப்பீட்டுத் தொகை (மில்லியன்) (வற் நீங்கலாக) | ஒப்பந்தக் காலம் (மாதம்) | வேண்டப்படும் தரம் | வேண்டப்படும் கேள்விப்பிணையின் தொகை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | பாதுகாப்பு பிணைத்தொகை | செல்லுபடியாகும் காலம் |
| 1 | NP/15/03/02/PSDG /CO-OP/2021/12 | EXPENSES NECESSARY TO BE INCURRED FOR EXPANSION OF OFFICE BUILDING FOR DEPARTMENT OF COOPERATIVE DEVELOPMENT, NP AT KAITHADY | 2.29 | 90 Days | C8 or C7 (Building) | 23,000.00 | 29.09.2021 |

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக்குழு,**
**கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம்,**
**வடக்கு மாகாண சபை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**வைத்தியகலாநிதி**
**கந்தையா இராஜரெட்ணம்**
(J.P)

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 21 . 07 . 1951 | 10 . 06 . 2021 |

கடந்த (10.06.2021) அன்று இறைபதமடைந்த எமது குடும்பத் தலைவரின் இறுதிச் சடங்கில் நேரில் பங்கு பற்றியும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டும் ஆறுதல் கூறியோரிற்கும் எமது துயரில் பல்வேறு வழிகளில் பங்கு கொண்டவர்களிற்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிப்பதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**129, ஸ்ரேஷன் றோட்,**
**யாழ்ப்பாணம்.**

**குடும்பத்தினர்**

# கண்ணீர் அஞ்சலி



யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலய ஆசிரியர்
**திரு.கனகலிங்கம் மதிரூபன்**
அவர்களின் அன்புத் தந்தையார்
**திரு.நாகலிங்கம் கனகலிங்கம்**

அவர்கள் கடந்த 03.07.2021 அன்று சிவபதம் அடைந்தமையையிட்டு அவரது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தின ருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரது ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

**ஆசிரியர் நலன்புரிக் கழகம்**
**யா/கொழும்புத்துறை துரையப்பா வித்தியாலயம்**

# மரண அறிவித்தல்

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 02 . 07 . 1938 | 07 . 07 . 2021 |



## லீலா மாலினி பசநாயக்க

*ஈவ்லின் பாலர் பாடசாலைகள்*

கண்டியைச் சேர்ந்தவரும் நல்லூர் பரி.யாக்கோபு ஆலயக்குரு மனையில் வண பிதா R:H.R ஹூல் குடும்பத்துடன் 1958 ஆம் ஆண்டிலிருந்து வாழ்ந்தவரும் பேராசிரியர் போல் ஹூலுடன் வசித்தவருமாவார். இவரது அடக்க ஆராதனை நேற்று 09.07.2021 இல் கல்கிசை மயானத்தில் (அங்லிக்கன் பிரிவு) முற்பகல் 11.30 மணிக்கு நடைபெற்றது.

**நல்லூர்,**
**021 222 0191**

**தகவல்**
**கலாநிதி ராஜன் ஹூல்**

## ஆர்ப்பாட்டம்....

கொழும்பில் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தின் செயலாளர் ஜோசப் ஸ்டாலின் உள்ளிட்டோர் கைதுசெய்யப்பட்டமை தொடர்பிலும் நீதிமன்றத்தால் அவர்கள் விடுதலை செய்யப்பட்ட பின்னர் பொலிஸாரால் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்குக் கொண்டுசெல்லப்பட்டமை தொடர்பிலும் நேற்று நாடாளுமன்றத்தில் ஏற்பட்ட சர்ச்சையின்போது பதிலளிக்கையிலேயே அமைச்சர் சரத் வீரசேகர மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

"சுகாதார சேவைகள் பணிப்பாளரால் வழங்கப்பட்டுள்ள உத்தரவில், மக்கள் அதிகளவில் கூடும் பொதுக் கூட்டம், ஆர்ப்பாட்டங்கள் போன்ற செயற்பாடுகளால் கொரோனாத் தொற்றுப் பரவும் அபாயம் உள்ளது. அதனால் அவ்வாறாக மக்கள் அதிகளவில்கூடும் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்கள் நடத்தப்படக் கூடாது என்று கூறப்பட்டுள்ளது. இந்த உத்தரவை அவர் பொலிஸ் மாஅதிபருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

தனிமைப்படுத்தல் சட்டத்துக்கமைய அவ்வாறான உத்தரவை வழங்க விடயத்துக்குப் பொறுப்பான அதிகாரிக்கு அதிகாரம் உள்ளது. இதன்படி சுகாதார சேவைகள் பணிப்பாளர் அந்த உத்தரவை வழங்கியுள்ளார். அந்த உத்தரவை பொலிஸார் செயற்படுத்துகின்றனர்.

இதன்படி பொலிஸார் தொடர்ந்தும் கூட்டங்கள் மற்றும் ஆர்ப்பாட்டங்களை தடுத்து நிறுத்துவதுடன் அதனுடன் தொடர்புடையவர்களைக் கைதுசெய்வர். அதன்பின்னர் அவர்கள் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவார்கள். அதனைத் தொடர்ந்து பிணை வழங்கப்பட்ட பின்னர் தனிமைப்படுத்தல் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர்களே தீர்மானிப்பார்கள். அதன்போது அவர்களை தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்புவதா? அன்டிஜென் பரிசோதனைகளை நடத்துவதா? அவர்களை வீட்டில் தனிமைப்படுத்துவதா? மத்திய நிலையங்களுக்கு அனுப்புவதா? என்றும் தீர்மானிப்பர். இதன்படிதான் நேற்று (நேற்றுமுன்தினம்) கைதுசெய்யப்பட்டவர்கள் முல்லைத்தீவுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளனர்.

அவர்கள் முல்லைத்தீவுக்கு அழைத்துச் செல்லப்படும்போது நீர்கொழும்பில் வைத்து அவர்களுக்குத் தேவையான உடைகள் உள்ளிட்ட அனைத்தும் பெற்றுக்கொடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, தனிமைப்படுத்தல் மற்றும் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபடுவோரைக் கைதுசெய்யும் நடவடிக்கைகளையும் நாங்கள் ஒருபோதும் நிறுத்த மாட்டோம்" என்றார். (த-22)

## அரசின்...

திரத்தைப் பாதுகாத்திடு' எனும் கருப்பொருளில் ஐக்கிய மக்கள் சக்தி, சிவில் சமூக அமைப்புகள், ஐக்கிய இளைஞர் சக்தி மற்றும் ஐக்கிய மகளிர் சக்தி என்பன ஒன்றிணைந்து சுதந்திர சதுக்கத்தில் அமைதியான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டன.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தலைமையில் நடைபெற்ற இந்த ஆர்ப்பாட்டத்தில் பலர் கலந்துகொண்டனர். அரசுக்கு எதிரான பதாகைகளை ஏந்தியவாறு பல்வேறு கோஷங்களை எழுப்பி இவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன்போது உரையாற்றிய எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ,

"உரிமைகளுக்காகப் போராடும் மக்களை தனிமைப்படுத்தல் சட்டத்தைக் காட்டி அரசு கைதுசெய்து வருகின்றது. இதனை வன்மையாகக் கண்டிக்கின்றோம். சுகாதார ஒழுங்கு விதிகளுக்கு அமைய ஆர்ப்பாட்டங்களை நடத்த மக்களுக்கு உரிமை உள்ளது. அவ்வாறான ஆர்ப்பாட்டங்களை தடுப்பதற்கோ, அதில் ஈடுபடுபவர்களைக் கைதுசெய்வதற்கோ பொலிஸாருக்கு அதிகாரம் இல்லை. அவ்வாறு கைதுசெய்வதானது அரசமைப்பை மீறும் செயற்பாடு" என்றார். (த-22)

## சுதந்திர....

ராஜபக்சக்களுக்கு வேறு சட்டமா? சுதந்திர சதுக்கத்தில் இன்று சுதந்திரத்தைத் தேட வேண்டியுள்ளது." என்று தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார்.

கொழும்பு சுதந்திர சதுக்கத்தில் அரசுக்கு எதிராக நேற்று ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதன்போது உரையாற்றிய மனோ கணேசன் மேலும் தெரிவிக்கையில்,

"சுதந்திர சதுக்கத்தில் இன்று சுதந்திரத்தை தேட வேண்டியுள்ளது. ஒரே நாடு, ஒரே சட்டம் என்று சொன்னீர்களே என இவர்களுக்கு நாம் ஞாபகப்படுத்த வேண்டியுள்ளது. ஏனெனில், தங்கள் துன்பம், துயரம் காரணமாக மக்கள் தெருக்களுக்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்கிறார்கள். அவர்களை இந்த அரசின் பொலிஸ்படை கைதுசெய்து, சுய தனிமைக்கு அனுப்புகின்றது.

ஆனால், இந்தநாட்டுக்கு அமெரிக்காவிலிருந்து, அலாவுதீனின் அற்புத விளக்குடன் வந்த பஸில் ராஜபக்சவுக்கு ஆதரவு தெரிவித்து, பல இடங்களில் பலர் கூடிநின்று பட்டாசு வெடித்தார்கள். அவர்கள் மீது ஏன் கொரோனா சட்டம் பாயவில்லை?

தோட்ட தொழிலாளர்கள் வேதனம் இல்லாமல், துன்பத்தில் சிக்கி, நிர்க்கதி நிலையை நோக்கித் தள்ளப்பட்டுள்ளனர். இரசாயனக் கப்பல் அழிவால், மீனவர்கள் தொழில் இழந்து தவிக்கின்றனர். விவசாயிகள் உரம் இல்லாமல், விளைச்சல் இல்லாமல், வருமானம் இல்லாமல் துன்புறுகின்றனர்.

இதனாலேயே நாடு முழுக்க ஆர்ப்பாட்டங்கள் நடைபெறுகின்றன. மக்கள் தங்கள் துன்பங்களை நாட்டுக்கு தெரிவிக்க வேறு வழி இல்லை. ஆனால், அரசு பொலிஸாரைப்போட்டு, மக்களைக் கைதுசெய்கின்றது. கொரோனாவை காட்டி, தனிமைப்படுத்துகின்றது. இன்று இந்த நாட்டில் சிங்கள, தமிழ், முஸ்லிம் மக்களை ஒன்று சேர்த்து, நாம் சிங்கள, தமிழ், முஸ்லிம், பௌத்த, இந்து, இஸ்லாம், கத்தோலிக்கம் என்ற இலங்கை நாட்டை உருவாக்குவோம்" என்றார். (த-22)

## தரம் 5...

பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையை ஒக்ரோபர் 4 ஆம் திகதி தொடக்கம் 31ஆம் திகதி வரையும் நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று கல்வி அமைச்சின் செயலர் அறிவித்துள்ளார். அதற்கு முன்னர் அதிபர், ஆசிரியர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி ஏற்றப்பட்டுவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (த-இ)

## தனிமைப்படுத்தல்...

வகையில், செயற்பட முடியாது" என்று முன்னாள் பிரதமரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

நாடாளுமன்றின் நேற்றைய விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத்தெரிவிக்கும்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டில் நடைமுறையிலுள்ள தனிமைப்படுத்தல் சட்டத்தில் திருத்தங்களை மேற்கொள்ள வேண்டியது மிகவும் அவசியம். ஜி.எஸ்.பி. பிளஸ் வரிச்சலுகை தொடர்பாக எச்சரிக்கை விடுக்கப்பட்டிருந்த நிலையில், விடுதலைப் புலிகளின் 16 உறுப்பினர்களை அரசு விடுதலை செய்துள்ளது. இந்தநிலையில், கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஆர்ப்பாட்டத்தின்போது ஆசிரியர் சங்க பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கைதுசெய்யப்பட்டுள்ளார். இவர் ஐரோப்பிய ஒன்றியத்துக்கு தெரிந்த ஒரு நபராகவே இருந்து வருகிறார். எனினும், போராட்டங்களை நடத்த பொதுமக்களுக்கு உரிமையுள்ளது. என்றார். (த-இ)

## அந்திமத்தை...

போராட வேண்டும். அரசு இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது" என்று நாடாளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார். கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொருளாதார வீழ்ச்சிக்கு ராஜபக்சக்கள் பொறுப்புக்கூற வேண்டும். இந்தவிடயத்தில் நிதியமைச்சர் பஷில் ராஜபக்ச மாத்திரம் விதிவிலக்கல்ல.

மக்களின் பேச்சு சுதந்திரம் பலவந்தமான முறையில் அடக்கப்படுகிறது. இதற்கு கொவிட் தனிமைப்படுத்தல் சட்டம் பயன்படுத்தப்படுகிறது. கொத்தலாவல பல்கலைக்கழக சட்டவரைவுக்கு எதிர்ப்புத் தெரிவித்து நேற்று (நேற்றுமுன்தினம்) சிவில் அமைப்பினர் நாடாளுமன்ற சுற்றுவட்டத்தில் போராட்டத்தை முன்னெடுத்தார்கள்.

இந்தப் போராட்டத்தை பொலிஸார் பலவந்தமான முறையில் அடக்கினார்கள். ஆனால் நிதியமைச்சராக பஷில் ராஜபக்ச பதவியேற்றதை வீதியில் பட்டாசு வெடித்து கொண்டாடிய தரப்பினர்களை பொலிஸார் கவனத்தில் கொள்ளாமல் இருந்தது ஆச்சரியத்துக்குரியது.

ஜனநாயக கொள்கைக்கு முரணாக அரசு செயற்படுகிறது. பேச்சு சுதந்திரம் சர்வாதிகரமான முறையில் முடக்கப்படுகிறது. இவ்வாறான நிலையில் செயற்பட்ட அரசியல் தலைவர்கள் இறுதியில் மக்களால் புறக்கணிக்கப்பட்டதை ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச தலைமையிலான அரசு விளங்கிக் கொள்ள வேண்டும். அரசு இறுதி அத்தியாயத்தை நெருங்கியுள்ளது.

அரசுக்கு எதிரான போராட்டங்களை ஐக்கிய மக்கள் சக்தி இனி தலைமையேற்று முன்னெடுக்கும் அரசின் குறைபாடுகளை பகிரங்கப்படுத்தும் ஊடகங்களுக்கு எதிரான செயற்பாட்டை அரசு முன்னெடுத்துள்ளது. இதற்கு வெளிநாட்டு நிறுவனங்களும் ஒத்துழைப்பு வழங்கியுள்ளன. என்றார். (த-இ)

## நவாலி....

நிலையால், பொதுமக்கள் இடம்பெயர்ந்து நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் தஞ்சம் புகுந்திருந்த நிலையில், 1995ஆம் ஆண்டு ஜூலை மாதம் 09ஆம் திகதி விமான படையினர் குண்டுவீச்சு நடத்தினர். அதன்போது குழந்தைகள், பெண்கள் உட்பட 147க்கும் அதிகமானவர்கள் படுகொலை செய்யப்பட்டிருந்தனர். அவர்களின் நினைவாக அமைக்கப்பட்ட நினைவுத்தூபியில் மலரஞ்சலி செலுத்தி சுடரேற்றி அஞ்சலி செலுத்தினர். இதன்போது, அதிக எண்ணிக்கையிலான பொலிஸார் அங்கு குவிக்கப்பட்டிருந்தனர். தேவாலய வளாகத்தினுள் இராணுவத்தினரும் கடமையில் ஈடுபட்டிருந்தனர். (த-26)

## பயனாளிகள்...

எழுப்பியுள்ளார்.

கிராமிய வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் கட்டடப் பொருள்கள் தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சால் முன்னெடுக்கப்படும் வீட்டுத் திட்டம் தொடர்பான கலந்துரையாடல் 'சூம்' தொழில்நுட்பத்தின் ஊடாக நேற்றுக் காலை நடைபெற்றது. இதன்போது அமைச்சின் செயலர், பயனாளிகள் தெரிவு தொடர்பில் அமைச்சு நேரடியாக வந்து ஆய்வுகளை மேற்கொள்ளும் தவறான பயனாளிகள் தெரிவு செய்யப்பட்டிருப்பின் அவர் களைத் தெரிவு செய்த அதிகாரிகளே அதற்குப் பொறுப்பு என்று சுட்டிக்காட்டி னார்.

மேலும், மீள்குடியேற்றச் செயலணியின் ஆலோசகர் லியனகே, யாழ்ப்பாண மாவட்டத்தின் வீட்டுத் திட்டம் தொடர்பில் ஊடகங்களில் பல்வேறு விடயங்கள் வந்துள்ளனவே என்று மாவட்டச் செயலரிடம் வினவியபோது, அது வேறுபட்ட விடயம் (இட்ஸ் டிபரன்ட் சப்ஜெக்ட்) என்று பதிலளித்தார். வடக்கு கிழக்கு மாகாணங்களில் யாழ்ப்பாண மாவட்டத்தில் மட்டுமே வீட்டுத்திட்டப் பட்டியல் இன்னும் இறுதிசெய்யப்படாதுள்ளது. (ஒ.5)

## வீட்டுத்திட்டம்...

வீட்டுத் திட்டம் தொடர்பில் உதயனில் நேற்று வெளியான பெயர்ப்பட்டியலின் அடிப்படையில் 35 முறைப்பாடுகள் 'உதயனுக்கு' கிடைக்கப்பெற்றுள்ளன.

வீட்டுத்திட்டப் பட்டியலில் அரசியல் தலையீடுகளால் தகுதியானவர்கள் புறக்கணிக்கப்பட்டுள்ளனர் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டிருந்தது. இதனையடுத்து வீட்டுத்திட்ட பயனாளிகளின் இறுதிப் பட்டியலை காட்சிப்படுத்துமாறு மாவட்டச் செயலர் பணித்திருந்தார். ஆனாலும் பிரதேச மற்றும் கிராம மட்டங்களில் உரிய திகதியில் உரியவாறு பட்டியல்கள் காட்சிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

இந்த நிலையில், யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்களின் அனுமதிக்காக பிரதேச செயலர்களால் சமர்ப்பிக்கப்பட்ட இறுதிப் பட்டியலை 'உதயன்' நேற்றுப் பிரசுரித்திருந்தான். அந்தப் பட்டியல் தொடர்பில் முறையீடுகளை உதயனுக்கும் மேற்கொள்ள முடியும் என்றும் அறிவுறுத்தியிருந்தோம். அதற்கு அமைவாக நேற்றைய தினம் 35 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றிருந்தன.

உதயன் பத்திரிகையில் வெளியான பட்டியலில் தமது பெயர் உள்ளடக்கப்பட்டுள்ளது என்றும், பிரதேச செயலகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ள பட்டியலில் பெயர் இல்லை என்றும் வேறு இடங்களில் வீடு உள்ளவர்களின் பெயர்கள் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன என்றும் முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளது.

கிடைக்கப்பெற்ற முறைப்பாடுகள் தொடர்பில் உதயனின் புலனாய்வுச் செய்தியாளர்கள் தகவல்களைத் திரட்ட ஆரம்பித்துள்ளனர். முறைப்பாடுகளின் உண்மைத் தன்மை உறுதிப்படுத்தப்பட்டதும் அவை பிரசுரிக்கப்படுவதுடன், உரிய அதிகாரிகளுக்கும் சேர்ப்பிக்கப்படும். (ஒ.5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆப்கானைக் கட்டியெழுப்ப நாம் அங்கு செல்லவில்லை!

## அமெரிக்க வெளியேற்றம் குறித்து ஜோ பைடன் மழுப்பல் பதில்



**வொஷிங்டன், ஜூலை 10**

**ஆப்கானிஸ்தானைக் கட்டியெழுப்புவதற்காக நாம் அங்கு செல்லவில்லை. ஆப்கானிஸ்தானின் எதிர்காலத்தை மேம்படுத்த அந்நாட்டு தலைவர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுக்க வேண்டும் என அமெரிக்க அதிபர் பைடன் தெரிவித்துள்ளார்.**

டோகாவில் சமீபத்தில் நடைபெற்ற பேச்சில் தலிபான்களுக்கும், அமெரிக்காவுக்கும் உடன்பாடு ஏற்பட்டது. ஆப்கான் அரசுடன் தலிபான்கள் பேச்சில் ஈடுபட வேண்டும், ஆப்கானிலிருந்து வெளியேறும் அமெரிக்கப் படை மீது தாக்குதல் நடத்தக் கூடாது என்பன உள்ளிட்ட முடிவுகள் எட்டப்பட்டன. இந்த நிலையில் அமெரிக்கப் படைகளின் வெளியேற்றம் பற்றி பைடன் மேலும் தெரிவித்ததாவது:

ஆப்கானில் தேசத்தைக் கட்டமைக்கும் பணிக்காக அமெரிக்க ராணுவம் அங்கு செல்லவில்லை. அந்த நாட்டின் எதிர்காலத்தை மேம்படுத்த ஆப்கா்ன் தலைவர்கள் ஒன்றிணைந்து முயற்சிகளை எடுக்கவேண்டும். மேலும், ஆயிரக்கணக்கான அமெரிக்கர்களை ஆபத்தில் சிக்கவைக்க அமெரிக்கா விரும்பவில்லை.

தலிபான்களை நம்பவில்லை என்றபோதும், ஆப்கான் அரசை காக்கும் திறன் அந்த நாட்டு இராணுவத்துக்கு உள்ளது என்ற நம்பிக்கை உள்ளது.

எனவே, ஆப்கானில் அமெரிக்க இராணுவ நடவடிக்கை வரும் ஓகஸ்ட் 31ஆம் திகதியுடன் முழுமையாக முடிவுக்கு வரும்- என்றார். (ம)



# கின்னஸில் பதிவாகுமா குள்ளப்பசு?

டாக்கா, ஜூலை 10

பங்களாதேஷில் வெறும் 51 சென்ரிமீற்றர் உயரமே உள்ள பசு கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்குமா என்பது தொடர்பில் பெரும் எதிர்பார்ப்பு ஏற்பட்டுள்ளது.

பங்களாதேஷின் தலைநகர் டாக்கா அருகே சாரிகிராமில் உள்ள ஷிகோர் வேளாண் பண்ணையில் ராணி என்ற பசு உள்ளது. இது வெறும் 51 சென்ரிமீற்றர் உயரம் கொண்டது. 2 வயதான இந்தப் பசுதான் உலகிலேயே குள்ளமான பசு என அதன் உரிமையாளர் கூறுகிறார். தற்போது இந்தப் பசு தொடர்பான காணொலிகளும் ஒளிப்படங்களும் இணையங்களில் வைரலாகின்றன.

இந்தக் குள்ளப்பசுவை 'உலகின் குள்ளமான பசு' என்று கின்னஸ் புத்தகத்தில் இடம்பிடிக்க வைக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்று அதன் உரிமையாளர் தெரிவித்துள்ளார். (ம)



# சிறைக்குள் ஜூமா

ஜோகன்ஸ்பேர்க், ஜூலை 10

தென்னாபிரிக்கா நாட்டின் முன்னாள் அதிபர் ஜேக்கப் ஜூமா நீதிமன்றத்தை அவமதித்தார் என்ற குற்றச்சாட்டில் அவருக்குப் 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் அவர் சிறைக்குள் தள்ளப்பட்டார்.

79 வயதான ஜூமா தனது 9 ஆண்டுகால ஆட்சியில் பல்வேறு ஊழல்களில் ஈடுபட்டார் என்று குற்றஞ் சாட்டப்பட்டது. இது தொடர்பான நீதிமன்ற விசாரணைகளுக்கு ஜூமா உடன்படவில்லை. நீதிமன்றம் அழைப்பு விடுத்த போதிலும் ஜூமா விசாரணை களுக்கு முகம்கொடுக்க வில்லை. இதையடுத்து நீதிமன் றத்தை அவமதித்தார் என்று குற்றச்சாட்டில் ஜூமாவுக்கு 15 மாதங்கள் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இதையடுத்து அவர் பொலிஸில் சரணடைந்ததை அடுத்து சிறையில் அடைக்கப்பட்டார். தென்னாபிரிக்காவின் முன்னாள் அதிபர் ஒருவர் சிறைக்குச் செல்கின்றமை இதுவே முதல்முறை. (ம)

### ஹெய்ட்டி ஜனாதிபதி

# மொய்ஸ் கொலை விவகாரத்தில் நால்வர் கொலை: 17 பேர் கைது

போர்ட், ஜூலை 10

கரீபியன் தீவுகளில் உள்ள ஹெய்ட்டி நாட்டின் ஜனாதிபதி படுகொலை செய்யப்பட்ட விவகாரத்தில் மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர். 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று ஹெய்ட்டி பொலிஸார் அறிவித்துள்ளனர்.

பெப்ரவரி மாதம் மொய்ஸின் பதவிக்காலம் முடிவடைந்தது. எனினும் அடுத்த ஓராண்டுக்கு ஆட்சியில் இருக்கப்போகின்றேன் என்று மொய்ஸ் அறிவித்திருந்தார். இந்த நிலையில் கடந்த 6ஆம் திகதி அவரது வீட்டுக்குள் புகுந்த ஆயுதக் கும்பல் நடத்திய தாக்குதலில் மொய்ஸ் கொல்லப்பட்டார்.

இதையடுத்து மேற்கொள்ளப்பட்ட இராணுவ நடவடிக்கையில் மொய்ஸ் கொலையுடன் தொடர்புடைய கும்பலில் நால்வர் கொல்லப்பட்டுள்ளனர் என்றும் 17 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் ஹெய்ட்டி பொலிஸார் அறிவித்துள்ளனர். (ம)





# பாப்பரசருக்கு காய்ச்சல்!

உரோம், ஜூலை 10

பெருங்குடல் சுருக்கத்தால் அவதிப்பட்ட பாப்பரசர் பிரான்ஸிஸுக்கு கடந்த 4ஆம் திகதி உரோம் கெமில்லி மருத்துவமனையில் அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்பட்ட நிலையில், அவருக்கு தற்போது காய்ச்சல் ஏற்பட்டுள்ளது என்று மருத்துவமனை தகவல் தெரிவித்துள்ளது.

பாப்பரசர் பிரான்சிஸால் சாப்பிடவும், துணையின்றி நடக்கவும் முடிகின்றது. இலேசான காய்ச்சல் ஏற்பட்டுள்ளது. எனினும் அச்சப்படும் படியாக ஒன்றுமில்லை என்று திருச்சபையின் தலைமையகமான வத்திக்கான் அறிவித்துள்ளது. (ம)

# மாம்பழத் தூது

பங்களாதேஷின் பிரதமர் ஷேக் ஹசீனா, இந்தியப் பிரதமர் மோடி மற்றும் மேற்கு வங்காள மாநில முதலமைச்சர் மம்தா பானர்ஜி மற்றும் இதர தலைவர்களுக்கு மொத்தம் 2 ஆயிரத்து 600 கிலோ மாம்பழங்களை பரிசாக அனுப்பி வைத்தார். இந்தியா - பங்களாதேஷ் இடையிலான நட்புறவின் அடையாளமாக அவர் இந்தப் பரிசை வழங்கினார். 260 பெட்டிகளில் இந்த மாம்பழங்கள் வைக்கப்பட்டு, சரக்கு வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டன. எல்லையைக் கடந்து இந்திய பகுதிக்குள் வாகனங்கள் நுழைந்த போது, கொல்கத்தாவில் உள்ள பங்களாதேஷின் துணைத் தூதரகத்தின் [illegible] வாகனங்களை [illegible]. (ம)

**விற்பனைக்கு**
கப்பல் வாழைக்குட்டிகள்
விற்பனைக்குண்டு.
தொடர்பு: 077 038 6871

**காணி விற்பனைக்கு உண்டு**
யாழ்ப்பாணம் மாநகரசபைக்கு உட்பட்ட ஓட்டுமடம் சந்தி மானிப்பாய் வீதி, 1ஆம் ஒழுங்கையில் 3 பரப்புக்காணி விற்பனைக்கு உண்டு.
2 பரப்பாக பிரித்துக் கொடுக்கப்படும்.
யாழ் நகரிலிருந்து 1 1/2km தூரம்.
(பரப்பின் விலை 5 லட்சம் ரூபா)
தொடர்பு : 076 221 2037,
076 734 1023, 077 064 2661

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org